415

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



# கேட்டீர்களா!

## உலக பாஷைகள்

உலகத்தில் இன்று மொத்தம் 3,000 பாஷைகள் வழங்கி வருகின்றன என்று கண்டு பிடித்திருக்கிருர்கள். இந்தச் செய்தியை ஐ. நா. கல்வி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது.

## சென்னையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

பண்டிட் ஜவாஹர்லால் நேருவின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் தலைவியாகப் பதவி வகித்து வருகிருர். உலகிலேயே இத்தகைய பெரும் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி இவர்தான். இவர் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு டில்லி திரும்பும் வழியில் சென்னைக்கு விஜயம் செய்தார். இவர் இந்த நாட்டு விடுதலைக்காகப் பலமுறை சிறைப் பட்டிருக்கிருர்.

## இந்தியாவில் மாடுகள்

இந்தியாவில் இப்போது 1,930 லட்சம் மாடுகள் இருப்பதாகக் கணக்கு வெளியாகி இருக்கிறது. 300 கோடி ரூபாய் பெறுமான முள்ள பால் நமக்குக் கிடைக்கிறது.

## பெரம்பூர் ரெயில் பெட்டி உற்பத்திச்சாலை

ரெயில் பெட்டிகளைச் செய்யும் தொழிற்சாலை, பெரம்பூரில் அமைத்திருக்கிருர்கள். இப்போதுள்ள திட்டப்படி, இந்தியாவி லுள்ள எல்லா ரெயில்வேக்களுக்கும் ரெயில்பெட்டிகள் உற்பத்தி செய்ய உத்தேசம் இருக்கிறது. ஆசியாவிலேயே இந்தத் தொழிற் சாலைதான் பெரியதாக இருக்கப்போகிறது.

## காமகோடி பீடாதிபதியின் பிரதம சிஷ்யர்

ஸ்ரீ ஆதி சங்கரர் நம் நாட்டில் ஸ்தாபித்த 6 பீடங்களில் ஒன்று காஞ்சியில் அமைந்திருக்கும் ஸ்ரீ காம கோடி பீடம். இப்பொழுது ஆசார்யராக இருக்கும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் சென்ற வாரம் ஒரு பிரதம சிஷ்யரை ஏற்றுக் கொண்டிருக்கிருர் இவருக்கு வயது 19. நைட்டிகப் பிரம்மசாரி. சிறுவயதிலேயே வேதங்களையும் சாஸ்திரங் களையும் நன்கு கற்றவர். காலக்கிரமத்தில் இவரே காஞ்சி ஸ்ரீ காம கோடி பீடாதிபதியாவார். இவருடைய புதிய ஆஸ்ரமப் பெயர் ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்.

கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 7

1 - 4 - '54


| | | |
|---|---|---|
| குழந்தைகளே ! | பக்கம் | 2 |
| சந்திரகிரிக் கோட்டை | .. | 3 |
| மாஸ்டர் பாலகுமார் | .. | 9 |
| தேடின திருடன் | .. | 11 |
| பல நாள் திருடன் | .. | 13 |
| மாயா ஜலம் | .. | 13 |
| பாசம் | .. | 23 |
| கண்ணன் கழக அங்கத்தினர்கள் | | 27 |
| மந்திர மோதிரம் | .. | 29 |
| அசட்டுப் பிச்சு | .. | 33 |
| எங்கள் பகுதி | .. | 37 |
| கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை | | |
| பேராசை - மூன்றாவது அட்டை | | |


வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## புதிய வெளியீடுகள்

**சமர்த்து மைனா - தி. ஜ. ர.**

மைனா, குயில், குரங்கு, பூனை முதலிய பறவைகளையும் மிருகங்களையும் வைத்து எழுதிய கதைகள். அவற்றின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எழுதிய உண்மைக் கதைகள். விலை அணா 8.

★

**விஞ்ஞானம் பேசுகிறது - பெ.நா.அ. & ஜே.பி.மா.**

தந்தி, ரேடியோ, ஏரோப்ளேன் முதலியவைகள் எப்படி வேலை செய்கின்றன, யார் கண்டு பிடித்தார்கள் என்பவைகள் எல்லாம் படங்களாகவே விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAY 1954
MADRAS

★

**விளையும் பயிர் - கி. வா. ஜ.**

காந்தி, ஜவாஹர், டாகுர், பாரதி முதலியோர் உங்களைப் போல் குழந்தைகளாக இருந்த போது எப்படி இருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பவை கதைகள் போலவே சொல்லப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

**கண்ணன் காரியாலயம்**
மயிலாப்பூர் : : சென்னை-4.

# குழந்தைகளே!

உங்களுக்கு இந்த மாதமெல்லாம் மூச்சுவிட நேரமிருக்காது. பரீட்சை நெருங்கிவிட்டது. பாடங்களின் கடுமையும் வெயிலின் கடுமையும் சேர்ந்து உங்களை ஒரு மாதம் சரியாக வாட்டி எடுத்து விடும். ஆனாலும் நீங்கள் பாடங்களை முதலில் ஒரு கை பார்த்து முடித்து விட்டு வெயிலையும் ஒரு கை பார்த்து விடுவீர்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதானே! நன்றாகப் பாடங்களைப் படியுங்கள்; பரீட்சையில் நன்றாக எழுதுங்கள்; பாஸ் பண்ணுங்கள்.

இந்த இதழில் நானே சிறிதும் எதிர்பாராதபடி 'மாஸ்டர் பாலகுமார்' என்ற சித்திரத் தொடர்கதை முடிவு பெற்றுவிட்டது. இந்தக் கதை உங்கள் அபிமானத்தை முழுதும் பெற்றுவிட்டது என்பது எனக்குத் தெரியும். அதற்குள் இந்தக் கதை முடிந்துவிடப் போகிறது என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கவே மாட்டீர்கள். எனக்கும் கதையை இன்னும் கொஞ்சம் வளர்த்தலாமா என்று ஆசைதான். ஆனால் கதையை வளர்த்தால் கதையின் சுவை குறைந்து விடும். சுவை குறைந்தால் கதையே கெட்டுவிடும். இதற்குப் பதில் வேறொரு சித்திரக் கதை ஆரம்பித்தால் போகிறது; இதற்காக ஒரு நல்ல கதையைக் கெடுப்பானேன் என்று முடித்து விட்டேன். சில குழந்தைகளும் சில பெற்றோர்களும்கூட வீரபாண்டியக் கட்டப்பொம்மன் கதையைச் சித்திரக் கதையாக வெளியிடலாமே என்று-அடிக்கடி எழுதி வந்திருக்கிறார்கள். அதைச் செய்யத்தான் உத்தேசம். இப்பொழுது சந்திரகிரிக்கோட்டை, தொடர்கதையாக வருவதால் அது முடிந்த பிறகு அந்தச் சரித்திரக் கதையைச் சித்திரக் கதையாக வெளியிடலாம் என்று நினைக்கிறேன். அது வரையில் சித்திரக்கதையே வெளியிடாமல் இருக்கலாமா? வேறொரு கதையைப் புது வருஷப் பிறப்பிலிருந்து ஆரம்பிக்க முடிவு செய்து விட்டேன். கதையின் பெயரைக்கூட நான் உங்களுக்கு இப்போது தெரிவிக்கப் போவதில்லை. புது வருஷப் பரிசாக அந்தக் கதை அடுத்த இதழில் வெளிவரும்.

அடுத்த இதழில், 'கேளுங்கள்; சொல்லுகிறேன்' என்று ஒரு பகுதி ஆரம்பமாகிறது. உங்கள் கேள்விகளுக்கு அதில் 'புரொபஸர் விஞ்ஞானம்' பதில் கொடுக்கிறார். கேள்வி பொது அறிவுக்குரியதாக இருக்கவேண்டும். கன்னா பின்னா கேள்விகள் எல்லாம் கேட்கக் கூடாது; கேட்டால் பதில் வராது.

அடுத்த 'எங்கள் பகுதி'க்கு 15-3-'54 இதழ் பற்றிய விமரிசனம் எழுத வேண்டும். 7-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எழுதி விடுங்கள்.

வருஷப் பிறப்பன்று சந்திப்போம்.

—ஆசிரியர்.



# சந்திரகிரிக் கோட்டை

'ஜனா'

## 13

புலிக்கோட்டை பாளையக்காரர் பார்ப்பதற்குக் கிழச் சிங்கம் போல் தோற்றமளித்தார். கம்பீரமான உடல் அமைப்பு. பெரிய கண்கள். வீரம் தெறிக்கும் மீசை. சேனைத் தலைவர்களது போன்ற உடை. மார்பிலே இரும்புக் கவசம். இடையிலே நீண்ட போர் வாள். கடமையைத் தவறாது செய்து முடிக்கும் உறுதி படைத்தவர் என்று சொல்லாமலே விளங்கும் தோற்றம். அவர், சகோதரர் இருவரையும் ராஜ மரியாதைப்படி உபசார வார்த்தை எல்லாம் சொல்லி, காளி கோவிலின் உட்புறத்துக்கு அழைத்துச் சென்றார்.

சாப்பாட்டு வரிசை யெல்லாம் சம்பிரமமாக நடந்தேறின. பிறகு பாளையக்காரர் அவர்கள் இருவரையும் பார்த்து, "ராஜகுமாரர்களே, எங்கள் அரசர் பெருமான் என்னிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். அதைச் செய்து முடிக்க நான் இப்போது உங்கள் முன் நிற்கிறேன். இந்தப் பொறுப்பைச் செய்து முடிப்பதில் சிறிதும் தயையோ தாட்சிண்ணியமோ காட்டுவதற்கில்லை. என் கடமையைச் செய்வதில் நான் சிறிது கடுமையாகக்கூட இருப்பதாக உங்களுக்குத் தோன்றலாம். நீங்கள் அதை எல்லாம் பாராட்டாமல் உங்களுக்கு விதிக்கிற போட்டிகளில் மாணாக்கர்களைப்போலக் கலந்துகொள்ள வேண்டும். உங்களுடைய திறமை, மதிவன்மை, பொறுமை முதலியவற்றை நிரூபித்துக் காட்டுவதையே உங்கள் லட்சியமாகக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒருவரை ஒருவர் வெறுத்துப் பகைத்துக்கொள்ளக் கூடாது. ஒருவர் காரியங்களில் மற்றவர் தலையிடக் கூடாது. போட்டியில் வெல்வது ஒன்றே உங்கள் லட்சியமாக இருக்க வேண்டும். போட்டியின் நோக்கத்தை மறந்து, ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ள முற்படுவீர்களேயானால் உங்கள் இருவருக்குமே அதனால் பல சங்கடங்கள் நிகழும். இனி இன்று இரவு நீங்கள் இங்கேயே களைப்பாறுங்கள். நாளைக் காலையில் போட்டியில் ஈடுபடுவதற்குத்

தயாராக இருங்கள். நாங்கள் வருகிறோம்'' என்று சொன்னார். பிறகு அவர்கள் இருவரையும் காளி கோவிலின் உள்ளேயே தனியே விட்டுவிட்டு வெளியே சென்றார்.

அவரோடு அங்கே இருந்த அனைவரும் புறப்பட்டார்கள். அந்தப் புலிக்குட்டி என்ற சிறுவனும் அவர்களுடனேயே புறப்பட்டுச் சென்றான். சற்று நேரத்துக்குள் தீவட்டி வெளிச்சத்தில் பிரகாசமாகத் தெரிந்த அந்த இடம் இருள் சூழ்ந்த பயங்கரப் பிரதேசமாக மாறியது. அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருமே அங்கே இருந்ததாகத் தெரியவில்லை. ஒரே நிச்சப்தமாக இருந்தது.

பகலெல்லாம் நேர்ந்த பிரயாண அலுப்பினாலும் களைப்பினாலும் அவர்கள் ரொம்பவும் வாட்டமுற்றிருந்தார்கள். ஒருவரிடம் ஒருவர் எதுவும் பேசவே இல்லை. யந்திரத்தைப்போல மேலாடையைக் களைந்துவிட்டு உள் ஆடையுடன் தரையிலேயே படுத்துக் கொண்டார்கள்.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் அந்தத் தனி இடத்தில் ஒரு முகாந்தரமும் இன்றி விரோதிகளைப்போலப் படுத்துத் தூங்கியது ரொம்ப விசித்திரமாகவே இருந்தது. அவர்கள் இருவருடைய சிந்தனையிலும் புலிக் குட்டி எங்கே வந்தான், எப்படித் தங்களுக்கு முன்பாக அங்கே வந்தான், அவன் புலிக்குட்டியா அல்லது அவனைப்போல் இருக்கும் மற்றொருவனா என்ற கேள்விகள் மட்டும் தூங்கும்வரையிலும் புரண்டுகொண்டே இருந்திருக்கும்.

## 14

கிழக்கே வெள்ளி முளைத்தது. எங்கோ சேவல் கூவியது. பறவைகள் இரண்டொன்று சிறகை அடித்துக்கொண்டன. அமலன் சடக்கென்று கண் விழித்துக் கொண்டான். கோவிலின் வெளிப்புறத்துக்கு வந்தான். அந்த இடம் ஒரு பெரிய தோப்புக்கு நடுவே




**ஒருவர்: என்னங்க, உங்களுக்குத் திடீரென உடம்பு இப்படிச் சரியில்லாமே போயிட்டுது?**

**மற்றவர்: ஒண்ணுமில்லே, ஒரு புஸ்தகம் எழுதினேன், அதிலிருந்து உடம்பு சரியாயில்லே.**

**ஒருவர்: அப்படியா? என்ன புஸ்தகம் எழுதினீங்க?**

**மற்றவர்: 'ஆரோக்கியமாக வாழ்வது எப்படி' என்று எழுதினேன் அதனாலே....**

—ஏ. விஜயலக்ஷ்மி, கும்பகோணம்.

அமைந்திருப்பது தெரிந்தது. சற்றுத் தூரத்தில் புலிக் கோட்டையும் அதன் முன் உள்ள அகழியும் தெரிந்தன. அமலன் கால்போனபடி கோட்டை வாசலை நோக்கி விரைவாக நடக்கலானான். அவன் பத்துத் தப்படிகூட வைத்திருக்க மாட்டான். அதற்குள் எதிரே யாரோ வருவது தெரிந்தது. யார் என்று பார்க்கும் ஆவலில் அவனை நோக்கிச் சற்றுத் தூரம் ஓடினான். அவன் அருகே சென்றதும், "ஓ புலிக்குட்டியா! நேற்று ராத்திரி நீயும் பாளையக்காரருடன் போய் விட்டாயே! நீயாவது எங்களுக்குத் துணையாக இருந்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான் அமலன்.

புலிக் குட்டியினுடைய நடத்தை இன்று முற்றும் வேறு விதமாக இருந்தது. அவன் அமலனின் காலில் பணிவாக விழுந்து வணங்கி எழுந்து, "ராஜகுமார, எங்கள் அரசர் இன்னும் சற்று நேரத்தில் உங்களை அழைத்துச் செல்ல ஆட்களை அனுப்புவார். அதுவரையில், இங்கேயே இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்றான்.

அமலனின் சந்தேகம் தீர்ந்த பாடில்லை. "புலிக் குட்டிதானே நீ? நேற்று எங்களைக் குகை வாயிலில் மயக்கம் தெளிவித்தாயே, நீதானே அது? சொல்லேன்" என்றான்.

புலிக் குட்டி குனிந்த தலை நிமிரவில்லை. பதிலும் சொல்லவில்லை. ஆனால் பின்னால் எதையோ தன்னைக் கவனிக்கும்படி விரும்புகிறான் என்பதை அமலன் ஊகித்துக்கொண்டான். திரும்பிப் பார்த்தான். விமலன் இவர்கள் இருவரையும் பொறாமை நிறைந்த கண்களுடன் பார்த்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குமேல் பேசுவதற்கு அங்கே வழி இல்லாமற் போயிற்று.

இருள் திரையைச் சுருட்டியது போல் பொழுது பளிச்செனப் புலர்ந்து வந்தது. பட்சி ஜாலங்கள் இன்னிசை பாடிப் பறந்து சென்றன. பஞ்சகல்யாணியும் நீலவேணியும் உற்சாகத்துடன் கனைத்துக் குரல் கொடுத்தன. அவர்கள் தம் தம் குதிரைகளைத் தட்டிக் கொடுத்து, காலைச் சுறுசுறுப்புடன் மிடுக்காக வைத்து நின்றனர். சற்று முன் புலிக்




**கிட்டு: நீ ரொம்ப முன் கோபக்காரன்னு கோபாலன் சொன்னான்; உண்மைதானா?**

**ராமு: அவன் எப்படிடா, சொன்னான்! அவன் பல்லை ஒடச்சுக் கையில் கொடுத்துடறேன்.**

எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.

குட்டி தெரிவித்ததுபோல் பாளை யக்காரரிடமிருந்து அவர்களை அழைத்துச் செல்ல ஒரு குதிரைச் சேவகன் ஓடி வந்தான்.

"நாங்கள் தயாராக இருக்கிறோம். புறப்படலாமா?" என்றான் அமலன்.

"சித்தம்" என்றான் குதிரைச் சேவகன்.

அடுத்த கணம் சகோதரர்கள் இருவரும் குதிரை மேல் ஏறி அவனைப் பின்தொடர்ந்தார்கள். புலிக் குட்டி அதே இடத்தில் நின்றுவிட்டான்.

"நீ வரவில்லையா?" என்று விமலன் கேட்டதற்கு அவன் தலை அசைத்துவிட்டான்.

கோட்டை வாசலைக் கடந்து கிராமம் போன்றிருந்த தெருக்களை எல்லாம் தாண்டி, அவர்கள் பழங்காலத்திய கட்டிடம் போன்ற ஒரு பெரிய மாளிகையின் முன் போய் நின்றனர். அவர்கள் வாசலில் இறங்கியதும், இரண்டு வீரர்கள் அவர்களுடைய குதிரைகளைப் பிடித்துக் கொண்டார்கள். பல கூடங்களையும் கட்டுக்களையும் கடந்து கடைசியில் பாளையக்காரர் அமர்ந்திருந்த ஒரு மண்டபத்தை அடைந்தனர்.

நகரத்து முக்கிய மாந்தர்கள் அனைவரும் மண்டபத்தைச் சுற்றிக் குழுமியிருந்தார்கள். ராஜகுமாரர்களைக்





**அக்கா: (தம்பியைத் தனியாக அழைத்து) பெரியவர்கள் பேசும்போது நீ பேசாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். அவர்கள் பேசும்வரை பொறுத்திருக்கவேண்டும்.**

**தம்பி: நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டேன். ஆனால் அவர்கள் முடிக்கமாட்டோம் என்கிறார்களே.**

---

கண்டதும் அவர்கள் எழுந்து, 'ஜய விஜயீ பவ' என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

பாளையக்காரர் நடுவே வீற்றிருக்க, இரண்டுபுறமும் இரண்டு சகோதரர்களும் அமர்ந்தார்கள். நடுவே ஒரு மேடை இருந்தது. அதன் நடுவே ஒரு கத்தி செருகப்பட்டிருந்தது. கத்தியின் முனையிலே ஓர் எலுமிச்சம் பழம் செருகியிருந்தது. அதன் நடுவே ஒரு மெல்லிய ஊசி செங்குத்தாகக் குத்தி வைக்கப்பட் டிருந்தது, பாளையக்காரர் ராஜகுமாரர்களைப் பார்த்து, 'எலுமிச்சம் பழத்தின் மேலே செருகியிருக்கும் ஊசி உங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

இருவரும், ''தெரிகிறது'' என்றனர். பாளையக்காரர் எழுந்திருந்து கூட்டத்தினரைப் பார்த்து, ''மகாஜனங்களே, நம் அரசர் பெருமானுடைய அந்திம கால விருப்பப்படி எனக்கு இட்ட பணியைத் தொடங்குகிறேன். இதோ இருக்கும் ராஜகுமாரர் இருவரில் யார் இந்தப் போட்டிகளில் வென்று வெற்றிவாகையைச் சூடுகிறார்களோ அவருக்கு என்னிடம் ஒப்புவித்துள்ள ஒரு முறியின் பாகத்தைக் கொடுத்துவிடுவேன். மொத்தம் இவர்களுக்கு மூன்று விதப் போட்டிகள் நடத்தவேண்டும் என்று அமைச்சர் அருளேந்தி கட்டளையிட்டிருக்கிறார். மூன்றும் மூன்று விதமான போட்டிகள். அந்த மூன்று போட்டிகளையும் நீங்கள் நேரிலேயே இருந்து பார்த்து வெற்றி-தோல்வி இவற்றை நிர்ணயிக்க உதவி புரிவீர்கள் என்று நம்புகிறேன். முதல் போட்டி இதுதான்: வில்லை எடுத்து அம்பைப் பூட்டி அதோ அந்த ஊசியின் காதைப் பிளக்கவேண்டும். ஆனால் எலுமிச்சம் பழமோ கத்தியோ எதுவுமே கீழே விழக்கூடாது. இதை உங்கள் முன்னிலையில் செய்து காட்டும்படி அரசர் குல மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த இரண்டு போட்டிகளும் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறும்'' என்று சொல்லி முடித்துவிட்டு உட்கார்ந்தார்.

உடனே பறை முழங்கியது. தெய்வ வழிபாடு நடைபெற்றது.

மங்கள ஆரத்தி எடுத்தார்கள். இரண்டு வீரர்கள் பெரிய ஆரம் ஒன்றையும் அதன் மேல் தங்கப் பூணிட்ட வில்லையும் அம்பையும் கொண்டுவந்து நடுவிலே வைத்தார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. ஜனங்கள் உற்சாக மிகுதியினால் ஏதோ பேசிக்கொண்டே இருந்தார்கள். 'இதோ வில் வந்துவிட்டது', 'அதோ மாலை வந்துவிட்டது' என்று எங்கும் ஒரே குதூகலப் பேச்சு. ஓர் அரிய காட்சியைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி, அவர்கள் முகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் பாளையக்காரர் அந்த ஊசியை எடுத்து இரு சகோதரர்களிடமும் காட்டி, "இதன் காது சரியாக இருக்கிறதா, பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். இருவரும் திருப்தி அடைந்த பிறகு பழையபடி ஊசியைக் குத்தி வைத்தார்கள். ஜனங்களுடைய பலத்த கரகோஷத்துக்கிடையே சகோதரர்கள் இருவரும் மேடைக்கு வந்து நின்றார்கள்.

தெய்வத்துக்கும் கூட்டத்தினருக்கும் அமலன் தன் நமஸ்காரத்தைத் தெரிவித்துக்கொண்டான். அப்பொழுது எங்கும் அமைதி நிலவியிருந்தது. அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒரு குரல் எழும்பியது. எல்லோரும் அந்தத் திசையை நோக்கினார்கள். அமலனும் விமலனும் வேறு திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுது புலிக்குட்டி பாளையக்காரரைப் பார்த்து, "அரசே, ஒரு விண்ணப்பம். ராஜகுமாரர்களில் யார் இளையவரோ அவர்தான் முதலில் வில்லை வளைக்க அநுமதிக்கவேண்டும்; அதுதான் நீதி" என்றான்.

'இப்படி ஒரு நிபந்தனை வேண்டும்' என்று சொல்லும் ஆள் புலிக்குட்டியாக இருப்பதைக் கண்டு அமலன் ஆச்சரியப்பட்டான். 'தன்னிடம் வரமாட்டேன் என்று சொன்ன புலிக்குட்டி இந்தச் சமயத்தில் எங்கே வந்து முளைத்தான்' என்று விமலனும் ஆச்சரியப்பட்டான்.

இதற்குள் கூட்டத்தினரும், "அதுதான் சரி. அதுதான் சரி" என்று குரல் கொடுத்தனர். எடுத்த வில்லைக் கீழே வைத்துவிட்டுச் சோர்வடைந்த முகத்துடன் மேடையை விட்டுக் கீழே இறங்கினான் அமலன். விமலன் வில்லை எடுக்கப் புறப்பட்டான், மேடைக்கு. இப்பொழுதும் கூட்டத்தினர் ஆரவாரம் செய்யத் தொடங்கினார்கள். மீண்டும் புலிக்குட்டி, "அரசே, ஒரு விண்ணப்பம்" என்றான். இதைக் கேட்டதும் பாளையக்காரரும் ஜனங்களும் பிரமித்துப் போய்விட்டனர். இந்தத் தடவை அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற ஆவல் எல்லோர் நெஞ்சிலும் தோன்றியது. விமலனும் வில்லுடன் தயங்கி நின்றான். புலிக்குட்டியின் பேச்சை எல்லாரும் ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)


பாலகுமார்
கதை: ஆர்வி சித்திரம்: ஸாமி
பாலகுமார், முத்து, அவன் அம்மா மூவ ரும் பேசிக் கொண்டிருந் த சமயத்தில் சாலையில . . . . .
பாம்! பாம்! பாம்! பாம்!
ஆ! அதோ ஒரு கார்! அந்த டிரைவர் குரல் வளையை ஒரு நாய் கவ்விக் கொண்டிரு க்கிறது! பார் முத்து!!
பாலா! ஐயையோ! கார் மர த்தில் மோதி நின்று விட்டது. ஓடி வா! போய்ப் பார்போம்!
ஆ! ஆபத்து! உதவி!! காப்பாற்றுங்கள்!!! ஆ! ஆ!!
அடடே! இவன் தான் அந்த ச்சண்டாளன். என்னை அடி த்துவைத்த சர்க்கஸ்கார ன்!
டேய்! பின்ஸீட்டிலேயாரோ ஒரு பொம்பளை இருக்கா ங்களே!!
உயிர் இருக்கா இல்லையா? பார்!
நாய் விடமாட்டேன் என்கிறதே!
அம்மா! நீ போய் கொஞ்சம் ஜலம் கொ டுவா! சீக்கிரம்!!
பின்னால் சற்று தூரத்தில் . . . . . . . . .
ரூபாயைக் கொடு முன்னால்!
டேய்! பையா! உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன். கீழே கிடக்கும் துப்பாக்கியை கொடு.
துப்பாக்கியா வேணும்?


பாலா! இந்தா, துப்பாக்கியைப் பிடி!
அட துரோகி!
அதோ நிற்கிறது ஒரு வண்டி!
விபத்து போலிருக்கிறதே!
ஆ, பாலகுமார்!
ஹலோ! டைரெக்டர் ஸார்!
டைகர்! உன் வேலை முடிந்து விட்டது. இனி என் வேலை தான்!
மிஸ்டர்! நாஜு துரோகி! ஹா... ஹா!
எஜமான்! நீங்களா?
யார் இவள்? ஏனம்மா நீ கமலமா?
ஆ!!-செல்லம்!
இப்போது தான் எனக்கு எல்லாம் புரிகிறது!
ஆ!!-அம்மா!
ஆ!!- எஜமானியம்மா!!
ஆ! நான் எங்கே இருக்கிறேன்! ரெயில் விபத்தா! என் குழந்தை எங்கே?
அம்மா! என்னைப் பாருங்கள்! நான் தான் அம்மா உங்க கமலம்! இதோ உங்க குழந்தை பாலகுமாரும், எஜமானும்
அப்பா!
குழந்தாய்! வா!
கடவுள் தான் எல்லோரையும் மறுபடியும் சேர்த்து வைத்தார்!
ஒரு மாதம் கழித்து......
டாக்டர்! செல்லம் எப்படியிருக்கிறாள்?
அவளுக்கு அதிர்ச்சியினால் பழைய ஞாபகம் வந்து விட்டது! இனிப் பயமில்லை. உங்கள் அடையாளம் தெரியும்.
ராஜா! அதோ அந்த சர்க்கஸ்காரன் பியூனைப் பாருங்கள்! முத்து வின் அப்பா வா இவன்?
ஆமாம்!
பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்தது. சர்க்கஸ் கம்பெனி அழிந்தது. பாலகுமார் லட்சம் லட்சமாகச் சம்பாதித்தான். இப்போது முத்துவும் அவனுடன் சேர்ந்து நடிக்கிறான். எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.
......சுபம்.......



# தேடின திருடன்

**சம்பந்தம்**

அந்தக் கிராமத்தில் திடீரெனத் திருடர் பயம் ஏற்பட்டு விட்டது. அவரவர்கள் மாலை இருட்டினதுமே கதவைச் சாத்திக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். பத்தாவது மைலில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கும் இந்தச் செய்தி எட்டியது. உடனே இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்களை அந்தக் கிராமத்துக்கு இரவிலே அனுப்பி வைத்தார்.

அவர்கள் கிராமத்தில் இருந்த அன்றைக்கே கிராமத்து மேலண்டை மூலையில் ஒரு திருட்டு நடக்கத்தான் நடந்தது.

எத்தனை நாட்கள்தான் இதை நீடிக்க விடுவது! கிராமத்து இளைஞர்கள் அனைவரும் கன்னி கோவில் ஆலமரத்தடியில் கூடிப் பேசினார்கள். பட்டணத்தில் வாசித்துக்கொண்டிருந்த பரந்தாமன் கோடை விடுமுறைக்குக் கிராமத்துக்கு வந்திருந்தான். அவன்தான் அவர்களுக்குத் தலைவன்.

"அரசாங்கத்தை எதிர்பார்த்துத்தான் பிரயோஜனமில்லாமல் போய்விட்டது. நமக்குள் ஒரு பகுதிக்கு ஒருவராக இரவில் 'ரோந்து' வந்து திருடனைப் பிடிக்க வேண்டியது. முதலில் பிடிப்பவனுக்கு ஒரு பரிசும் ஏற்பாடு செய்துகொள்வோம்" என்றான் பரந்தாமன்.

"அதையும் இன்றைக்கே வைத்துக்கொள்வோம். இன்று அமாவாசை. திருடனும் இன்றைக்குத்தான் வருவான்" என்றான் பரந்தாமன்.

கேசவன் அன்றே திருடனைப் பிடிப்பது என்ற யோசனைக்கு மட்டும் சம்மதிக்கவில்லை. "திருடர்களுக்குத் தெரியும். அமாவாசை அன்று அவர்கள் வரமாட்டார்கள். மறுநாளுக்கு மறுநாள்தான் வருவார்கள். சென்ற தடவை கூட அப்படித்தானே வந்தான்?" என்றான் அவன்.

"ஆமாம். கேசவன் சொல்வதும் சரிதான்" என்றார்கள் மற்றவர்கள். எனவே, "சரி. உங்கள் இஷ்டம்" என்று அரை மனத்துடன் சம்மதித்துக்கொண்டு வீடு திரும்பினான் பரந்தாமன். ஆனால் 'அமா

வாசையன்றுதான் திருடன் வருவான்' என்ற எண்ணத்தை அவனால் மாற்றிக்கொள்ளவே முடியவில்லை. அன்றிரவு தூக்கம் வராமல் அதையே அவன் எண்ணிக்கொண்டிருந்தான்.

இரவு வெகு நேரமாகியது. 'சரி, இன்று நாம் மாத்திரம் சென்று பார்ப்போம்' என்று வெளியே புறப்பட்டுவிட்டான் பரந்தாமன். சிறு குண்டாந்தடியை இடுப்பில் செருகிக்கொண்டு, திருடனைப் பயமுறுத்த 'கேப்' வைத்துச் சுடும் பெரிய தகரத் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு, சந்தடி செய்யாது சென்றான்.

வானவெளி எங்கும் வெள்ளி நட்சத்திரங்கள் அள்ளித் தெளித்துக் கிடந்தன. எனினும் லேசான மங்கிய வெளிச்சம் இருந்ததே ஒழிய எங்கும் இருட்டாகத்தான் கிடந்தது. ஒரே பனி. சில்லென்று குளிர்வாடை வீசியது. கிராமத்திலிருந்த இரண்டொரு நாய்கள் கூட, வாலைச் சுருட்டி வளைந்து படுத்துக் கிடந்தன. சுற்றிலும் பார்த்துக்கொண்டு அடிமேல் அடி வைத்துச் சென்றான் பரந்தாமன். அந்தக் கிராமத்தையே ஒரு தடவை அவன் சுற்றிவிட்டான்.

'கேசவன் சொன்னதும் சரியாய்த்தான் இருக்கிறது. எதற்கும் இந்தப் பக்கம் போய்ப் பார்ப்போம்' என்று எண்ணிக்கொண்டே குறுக்குத் தெருவில் புகுந்தான். அங்கொரு திருடன் பதுங்கிச் செல்வதைப் பார்த்துவிட்டான். அவன் பின்னாலேயே சென்றான் சற்றுத்தூரம். அவன் திரும்புவது போல் தெரியவே, அங்கிருந்த மரத்தினடியில் ஒளிந்துகொண்டான்.

அந்தத் திருடன் ஒவ்வொரு வீடாகக் கூர்ந்து பார்த்துக்கொண்டே வந்து, வழியிலிருந்த மாட்டுக் கொட்டிலொன்றில் புகுந்தான். பரந்தாமன் அதைப் பார்த்து மெதுவாய் மரத்தைவிட்டு வெளியேறினான். அதற்குள் அந்தத் திருடன் திரும்பவே, மறுபடியும் திடுதிடுவென்று அந்த மரத்தின் அடிக்கே வந்துவிட்டான்.

திருடன் அந்த மரத்தடிக்கு வந்து சற்றுத் தயங்கினான். பரந்தாமன் மூச்சைப் பிடித்துக் கொண்டு மரத்தோடு மரமாய் நின்றான். பரந்தாமனுக்கு வெடுக்கென நீண்ட பெருமூச்சு வந்துவிட்டது. அடுத்த கணம் "ஆ! அகப்பட்டான் திருடன்!" என்று அந்தத் திருடனே பரந்தாமனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். உடனே, "திருடன்! திருடன்!" என்று இருவரும் கத்த, பக்கத்து வீட்டுக்காரர்கள் தடித் தாம்புடன் விளக்கை யெடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். ஆச்சரியம்! கேசவனும் பரந்தாமனும் கட்டிப் புரண்டுகொண்டு, கிடந்தார்கள் அங்கே. "என்னடா கேசவா!" என்றான் பரந்தாமன். "என்னடா பரந்தாமா!" என்றான் கேசவன். "நீதான் இன்றைக்கே திருடன் வருவான் என்று சொன்னாயேடா, அதனால்தான் வந்தேன்" என்றான் கேசவன். "நீதான் இன்றைக்குத் திருடன் வரவே மாட்டான் என்று சொன்னாயேடா" என்றான் பரந்தாமன்.

"சரி, போங்கோடா, திருடனை நன்றாய்ப் பிடித்தீர்கள்!" என்றார்கள் அங்கே கூடினவர்கள்.

இருவரும் முகத்தில் அசடு வழிய வீட்டுக்குத் திரும்பினர்.



# பல நாள் திருடன்

கே. கே. கோமளா

காளிமுத்து, களவுத்தொழிலில் கரைகண்டவன். மற்றத் திருடர்களைப் போல் அல்லாமல் அவன் திருடும் முறையே தனி விதம். அவன் ஒரு கோழைத் திருடன் அல்ல. வீரத் திருடன். எப்படி என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன்!

அவன் இரவின் வருகைக்காகக் காத்திருக்கமாட்டான். கன்னக் கோலை வைத்துக்கொண்டு எந்த வீட்டில் எந்தப் பக்கம் கன்னம் வைக்கலாம் என்று ஆராயமாட்டான். ‘மூர்மார்க்கெட்’டுக்கு அருகிலோ சைனுபஜாரிலோ யாருடைய ‘பர்ஸை’ஜேப்படி செய்யலாம் என்று சிந்திக்கமாட்டான். பட்டப் பகலில் பயமின்றித் தன் வேலையைச் செய்வான்.

ஜோராக, கச்சிதமாக உடை அணிந்துகொண்டு கிளம்புவான். உடைகளைக் கண்டு அவனைப் பெரிய உத்தியோகஸ்தர் என்றே அனைவரும் கருதுவார்கள். ஒரு வீட்டிற்குள் (முன்பின் தெரியாதவர் வீடுதான்! தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் நுழைய அவனுக்குப் பைத்தியமா என்ன?) நுழைந்து சுற்று முற்றும் பார்ப்பான்.

அந்த வீட்டில் யாராவது இருந்தால் சரி; இல்லாவிட்டால் கைக்கு அகப்படுவதைச் சுருட்டிக் கொண்டுவிடுவான். கண் இமைக்கும் நேரத்தில் அவன் வேலை முடிந்துவிடும்.

அப்படி அங்கே யாராவது இருந்துவிட்டால் நுழைந்ததற்கு ஏதேனும் காரணம் கூறித் தப்பித்துக் கொள்ள அவனுக்கா தெரியாது!

"என்னங்க! இந்த வீட்டில் தானே வேணுகோபால் நாயுடு இருக்கிறார்?" என்று அக்கறையாக விசாரிப்பான்.

"இந்த வீடு இல்லேங்களே!" என்று மரியாதையாகவே பதில் வரும். அவன்தான் பிரமாதமாக உடை அணிந்துகொண்டிருக்கிறானே!

"ஐயையோ! இதுவும் இல்லீங்களா? சரியாப் போச்சு! இது எட்டாவது வீடு. அந்த மனுஷன் சரியா விலாசம் கொடுக்காததனாலே இந்தக் கஷ்டம்!" என்று அலுத்துக் கொள்வான் காளிமுத்து. பிறகு, "அப்பா, என்ன வெயில்! என்னங்க, குடிக்க கொஞ்சம் தண்ணீர் தருகிறீர்களா?" என்று விநயமாகக் கேட்பான்.

அந்த மனிதர் உள்ளே போய்த் தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவதற்குள் தன் காரியத்தை முடித்துக் கொண்டுவிடுவான் காளிமுத்து.

கொண்டு வந்து கொடுக்கும் தண்ணீரைக் குடித்துவிட்டுத்தான் போவான். குடித்துவிட்டு வந்தனத்தைத் (தண்ணீருக்கு மட்டுமல்ல. எடுத்துக்கொண்ட பொருளுக்கும் சேர்த்துத்தான்!) தெரிவித்துவிட்டுச் சாவதானமாக நடந்து போவான்.

அன்று ஒரு நாள் காளிமுத்து வழக்கம்போல் வேலையைக் கவனிக்கக் கிளம்பினான்.

"ஐயா, ஐயா!" என்று ஒரு வீட்டின் கதவைத் தட்டினான் காளிமுத்து.

"யாரய்யா அங்கே? கதவை உடைத்து விடுகிற மாதிரி தட்டுவது?" என்று உள்ளேயிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"சுந்தரம்பிள்ளை இருக்கிறாரா அம்மா?" என்றான் காளிமுத்து.

"இங்கே ஒரு பிள்ளையும் இல்லை. இப்படி எதையாவது ஒரு பெயரைக் கேட்டுண்டு உள்ளே நுழைவது. அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடுவது!"-அந்தப் பெண் முடிப்பதற்குள் அந்தத் தெருத் திருப்பத்தில் இருந்தான் காளிமுத்து!

தன்னைச் சமாளித்துக்கொண்டு அடுத்த தெருவில் மற்றொரு வீட்டிற்குள் அவன் நுழைந்தான்.

அந்த வீட்டில் பெரியவர் முதல் சிறியவர் வரையில் கூடத்தில் உட்கார்ந்து, சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். இது தன் வேலைக்கு ஏற்ற இடமல்ல என்று காளிமுத்து தீர்மானித்துக்கொண்டான். வந்ததற்கு ஏதேனும் காரணம் கூறியாக வேண்டுமே!

"இங்கே தானே ராமகிருஷ்ணய்யர் இருக்கிறார்?" என்று கேட்டான்.

"இங்கே யாரும் அந்த மாதிரி இல்லேப்பா!" என்று அவர்களுக்கு நடுவில் இருந்த ஒரு கிழவர் கூறினார்.

"இப்படித்தான் தாத்தா, நேற்றுப் பார்த்த சினிமாவிலேகூட ஒரு திருடன் ஒவ்வொரு வீட்டிலாக நுழைந்து ஒரு பெயரைக் கேட்கிறான். சமயம் பார்த்து எதையாவது சுருட்டிக்கொண்டு போய் விடுகிறான், தாத்தா! இந்தக் காலத்திலே யாரையுமே நம்பக்கூடாது" என்று ஒரு சிறுவன் கூறியது தெளிவாக அவன் காதில் விழுந்தது. 'சரி, இந்தத் தெருவும் நமக்கு ஒத்து வரவில்லை!' என்று எண்ணியவனாய் அடுத்த தெருவுக்குப் போனான்.



அங்கே ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அவன் மனம் குதுகலத்தில் ஆழ்ந்தது. வீட்டின் முன் பக்கம் ஒரு ஈ, காக்காய் கூட இல்லை. 'சரி! அதிர்ஷ்டம் நம் பக்கமிருக்கிறது' என்று எண்ணினன். சுற்றுமுற்றும்பார்த்தான். சற்றுத் தூரத்தில் தரையில் ஒரு வெள்ளிடம்ளர் உருண்டு கிடந்தது.

அந்த டம்ளரை எடுக்கக் கையை நீட்டினன். அதற்குள் பின் கட்டிலிருந்து இருவர் பேசிக் கொண்டே அங்கு வந்தனர். "பாருங்க சார்! இந்தப் பெண் பிள்ளைகளையெல்லாம். ஒருவர் கூட முன் பக்கம் இல்லாமல் எல்லோரும் பின் கட்டிற்குள் புகுந்து கொண்டு விட்டனர். எவனுவது நுழைந்து, எதையாவது சுருட்டிக் கொண்டு போய் விட்டாறைல் அப்பொழுது தெரியும் இவர்களுக்கு. காலம் கெட்டுக் கிடக்கிறது ஸார்" எனக் கூறினர் ஒருவர். அங்கே காளிமுத்துவைப் பார்த்ததும், "என்ன அப்பா? யார் நீ?" என்றார்.

அவர் இதுவரை கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த காளிமுத்துவின் நெஞ்சு 'பக்பக்' என்று அணையப்போகும் அரிக்கன் லாந்தரைப்போல் அடித்துக் கொண்டது.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "இங்கே ஒரு சிறிய நாய்க்குட்டி வந்ததுங்களா?" என்ருன்.

"இங்கே நாயும் நுழையவில்லை, பூனையும் நுழையவில்லை! திறந்த வீட்டிற்குள் நாய் நுழைவதுபோல் நீதான் நுழைந்திருக்கே!" என்று இருவரில் ஒருவர் அதட்டலாகப் பேசினர்.

இனி அங்கே நிற்பது ஆபத்து என்பதை நன்குணர்ந்த காளிமுத்து அங்கிருந்து மெள்ள நழுவினன்.

'இன்று போன இடங்களிலெல்லாம் வெற்றிகரமாக வாபஸாகிக் கொண்டு வருகிறேம்! இன்று இத்துடன் நிறுத்திக் கொள்வோம்' என்று எண்ணியவனய் நடந்தான்.

ஒரு தெருவழியே போய்க் கொண்டிருக்கும்போது ஓர் அழகான பங்களா அவன் கண்ணில்

பட்டுவிட்டது. பங்களா முன்புறத்தில் ஒருவருமே இல்லை என்பதை அவன் கண்டான்.

'சரியான இடம். இதற்குள் நம் கை வரிசையைக் காட்டினால் நிறையக் கிடைக்கும்' என்று எண்ணி அகமகிழ்ந்தவனாக உள்ளே நுழைந்தான். தாழ்வாரத்துச் சுவரில் ஒரு பித்தளைத் தகட்டில் ஏதோ ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. அவனுக்கு ஆங்கிலம் கொஞ்சம் கூடத் தெரியாது.

"இது ஒரு பெரிய மனிதருடைய பங்களா. அவருடைய பெயர் அதில் எழுதியிருக்கிறது போலும்" என்று தனக்குள் கூறிக்கொண்டே உள்ளே போனான். அவன் எதிர்பார்த்தபடி அங்கே ஒருவரும் இல்லை. எதற்கும் ஒரு முறை அங்கு ஒருவருமில்லை என்பதை நிச்சயப் படுத்திக்கொள்ள, "ஸார்! ஸார்!" என்று கூப்பிட்டான்.

அவன் கூப்பிட்டதும் உள்ளேயிருந்து, "யாரங்கே? ப்யூன் எங்கே போய்விட்டான்?" என்ற குரல் கேட்டது. உடனே யாரோ ஒருவர் வெளியே வந்தார்.

'ஐயையோ! ஒருவருமில்லை என்று எண்ணிவிட்டோம்!' என்று மனத்திற்குள் தவித்தான் காளிமுத்து. ஏதாவது ஒரு பெயரைச் சொல்லிச் சமாளித்துக் கொள்ளும் நோக்கத்தோடு, "இங்கே துரைராஜ் என்பவர் இருக்கிறாரா?" என்றான்.

"நானே அவர். உட்கார். நீ யார்? என்ன வேண்டும்?" என்றார் துரைராஜ்.

'அட ராமா!' என்று மனத்திற்குள் சலித்தவண்ணம், "நான் மாம்பலத்திலிருந்து வருகிறேன். சோமசுந்தரம் என்பவர் அனுப்பினார்" என்றான். இப்படி ஏதாவது கூறினால், 'அவர் யாரோ எனக்குத் தெரியாது. வேறு யாராவது இருக்கும்' என்று கூறிவிடுவார்கள்; தானும் தப்பித்துக்கொள்ளலாம் என்ற காளிமுத்துவின் எண்ணத்தில் மண் விழுந்தது.

காளிமுத்துவின் நடை, பேச்சு இவை துரைராஜுக்குச் சந்தேகத்தை எழுப்பின. மேலும் அவருக்கு மாம்பலத்தில் அதிகமாக யாரையுமே தெரியாது. அப்படித் தெரிந்தவர்களிலும் சோமசுந்தரம் என்பவர் கிடையவே கிடையாது. இவை காளிமுத்துவின் கைச்

---



**கண்ணன்: யாரு அங்கே அஹிம்சையைப் பற்றி இவ்வளவு ஜோராப் பேசறது?**

**கந்தன்: அவர்தான் ஹிந்து மிலிட்டரி ஹோட்டல் முதலாளி.**

**—எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.**

சரக்கு என்பதை ஒரு நொடியில் அவர் அறிந்து கொண்டுவிட்டார். அவர்தாம் ஒரு துப்பறியும் சிங்க மாயிற்றே! (ஆம்! வாசலில் பித்தளைத் தகட்டில் ஆங்கிலத்தில் எழுதியிருந்தது "துப்பறியும் நிபுணர் - துரைராஜ்" என்பதுதான். அது தெரிந்திருந்தால் அங்கே நுழைந்திருப்பானா? பாவம்!)

துரைராஜ் காளிமுத்துவிடம், "ஓ, ஓ, நம் சோமசுந்தரமா? என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லு!" என்றார்.

இப்பொழுது காளிமுத்துவை உண்மையிலேயே திகில் பற்றிக் கொண்டது. பிள்ளையார் பிடிக்கப் போய், குரங்காக முடிந்ததே என்று பயந்தான். "நீங்கள் ஏதோ கொடுத்து அனுப்பவில்லை என்று கேட்டுவரச் சொன்னார். எனக்கு இந்தப் பக்கம் சிறிது வேலையிருந்தது. அப்படியே இதையும் கேட்டுப் போகலாம் என்று இங்கு நுழைந்தேன்" என்று தைரியமாகக் கூறினான்.

அவன் இவ்வாறு கூறியதும் அவன் நிச்சயம் ஒரு கேடி என்பதை அறிந்துகொண்டு விட்டார் துரைராஜ்.

"என்ன கொடுத்தனுப்புவதாகக் கூறினேன்? எனக்கு நினைவில்லையே!" என்று சிறிது நேரம் யோசிப்பது போல் பாவனை செய்தார் துரைராஜ்.

பிறகு திடீரென்று, "ஆ! இப்பொழுது நினைவு வருகிறது. தங்கச் சங்கிலி கொடுத்தனுப்புவதாகக் கூறியிருந்தேன்" என்று கூறினார் நமட்டுச் சிரிப்புடன்.

"ஆமாம், ஆமாம். அவரும் சங்கிலி என்றுதான் கூறினார்" என்று ஒரு போடு போட்டான் காளிமுத்து.

"இத்தனை நாளாக நினைவேயில்லை. நல்ல காலம், நீயாக வந்து ஞாபகப் படுத்தினாயே! மிகவும் நன்றி. அதை உன் கையிலேயே கொடுத்து விடுகிறேன். நீயே கொண்டு போய்க் கொடுத்துவிடு" என்றார் துரைராஜ்.

காளிமுத்துவின் மனம் ஆனந்தத்தால் விம்மியது. அதிர்ஷ்டம் அடித்தால் இப்படியல்லவா அடிக்கவேண்டும் என்று குதுகலித்தான்.

"ஏய், நூத்திப் பதினொன்று!" என்று துரைராஜ் கூப்பிட்டதும் ஒரு ஜவான் வந்து 'சல்யூட்' அடித்தான்.

துரைராஜ் கண்ணைச் சிமிட்டியபடியே, "அந்தச் சங்கிலியை எடுத்துவா. சீக்கிரம், மிஸ்டர் காத்திருக்கிறார்!" என்றார். ஜவானைக் கண்டதும் துரைராஜுக்குப் பகீர் என்றது. அடுத்த கணம் கையில் விலங்குடன் வந்த ஜவானைக் கண்ட காளிமுத்து துள்ளி எழுந்தான்.

"இருப்பா, சங்கிலியை வாங்கிப் போட்டுக் கொண்டு போ. அவசரமில்லை" என்று கேலியாகக் கூறியவாறு அவன் கைகளைப் பற்றினார் துரைராஜ்.

தானே வலிய வந்து அந்தப் பொறியில் சிக்குண்டதை எண்ணித் தன் புத்தியை நொந்துகொண்டான். செய்வது இன்னதென்று தெரியாமல் சிலைபோல் பிரமித்து நின்றான், களவுத்தொழிலின் முடிசூடா மன்னன் காளிமுத்து!

# மாயா ஜாலம்

**கே. எஸ். பி.**

ஞாயிற்றுக்கிழமைகளில் நான் பீச்சுக்குப் போகத் தவறவேமாட்டேன். பையில் கொஞ்சம் சில்லறையைப் போட்டுக்கொண்டு, சாந்தோம் பஸ்ஸில் ஏறினேன்.

போஸ்டாபீசுக்கு அருகில் பஸ் நின்றது. எவனோ ஒருவன் வித்தை காட்டிக்கொண் டிருந்தான். வெல்லக் கட்டியை ஈ மொய்ப்பதுபோல அவனைச் சுற்றி மக்கள் கூட்டம்.

டமாரத்தைக் குடுகுடுவென்று அவன் தட்டினான். கூட்டம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. பீச்சுக்குச் செல்லும் சிறுவர்களும் பெரியவர்களும் தாங்கள் காற்று வாங்க வந்திருப்பதைக்கூட மறந்து, வித்தை பார்க்கக் கூடியிருந்தனர். நானும் முண்டி அடித்துக் கொண்டே கூட்டத்துக்குள் சென்றேன். உயரமான ஆசாமி ஒருவன் கையில் உடுக்கையை ஆட்டிக்கொண்டு கம்பீரமாக நின்று கொண் டிருந்தான். கீழே ஒரு துணியும் அதைச் சுற்றிலும் நூற்றுக் கணக்கான சிறு காகிதப் பொட்டலங்களும் பரப்பியிருந்தான். நடுவில் ஒரு பெரிய பெட்டியும் இருந்தது.

என்ன காட்டப் போகிறானோ என்று பள்ளிக்கூட ரிசல்டை எதிர்பார்ப்பது போல நான் விழி பிதுங்க அவனையே உற்று நோக்கிக்கொண் டிருந்தேன். கூட்டம் கிட்டத்தட்ட இருநூறு பேருக்குக் குழுமிவிட்டது. நாலைந்து போலீஸ்காரர்கள் கூடத் தங்கள் கடமையை மறந்து வேடிக்கை பார்க்க வந்துவிட்டனர்.

அவன் கைகால்களை உதறிக் கொண்டு ஆரம்பித்தான்: "பெரியோர்களே, மாதர்களே, தாய்மார்களே, சிறுவர்களே, ஜவான்களே . . . . !"

அதற்குள் கரகோஷமும் சிறுவர்களின் கைதட்டலும் பலமாகக் கேட்டன.

மீண்டும் அவன் பேசினான்: "நான் உங்களை எல்லாம் மயக்கி மாயஜாலங்கள் செய்யப் போவதில்லை. மாஞ்செடியை நட்டு மாங்காய் பறித்துக் காட்டப் போவதில்லை; குட்டிச் சாத்தானை வரவழைக்க மாட்டேன். பயப்படாதீர்கள்! உங்களை ஏமாற்றிப் பணத்தைத் தட்டிக்கொண்டு போகவோ வரவில்லை!"—மீண்டும் கரகோஷம்!

நான் ஜேபியில் கைவிட்டு, சில்லறை சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்துக்கொண்டேன்.

அவன் உரத்த குரலில், "இந்தியாவில் ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான மக்கள் பல்நோயினால் இறந்து போகிறார்கள். பற்களைக் காப்பாற்றுவது எவ்வளவு முக்கி

யம், தெரியுமா? நம் நாட்டில் இப்போது எத்தனை 'டூத் பேஸ்டு'கள் இல்லை!'' என்றான். அதைத் தொடர்ந்து கைதட்டல் காதைச் செவிடாக்கியது.

''தமிழ் நாட்டிலே, தமிழர்களான நாம் இந்தப்பற்பசையையா உபயோகிப்பது? தெரியாமலா நம் முன்னோர்கள், 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்று சொல்லியிருக்கிறார்கள். பல மோசமான பல்பொடிகள் இப்போது மார்க்கெட்டில் உள்ளன. அனைத்தும் போலிச் சரக்குகள். உண்மையாகச் சொல்லுங்கள்! பெரியோர்களே, இந்தப் பாழாய்ப்போன, உபயோகமற்ற பற்பொடியையா நாம் உபயோகிப்பது? இதனால் தான் நம் பல் அழிந்து, உடல் கெட்டுப் போகிறது. நல்ல பல் பொடி, மணமுள்ள பல் பொடி, மலிவான பல் பொடி, தேய்க்க வேண்டுமென்று ஆசையைக் கிளறும் பல் பொடி—சென்னையில் அப்படி ஒன்று உண்டு என்றால் அது இதுதான்!''—அவன் ஒரு குட்டி லெக்சரே அடித்துவிட்டான்.

பிறகு கூட்டத்திலிருந்த ஒரு சிறுவனைப் பார்த்து, ''தம்பீ! வா இப்படி!'' என்று அழைத்தான். பையன் தயங்கவே, ''பயப்படாதே தம்பி, வா!'' என்று அவன் அபயம் அளித்த பின்புதான் சிறுவன் நகர்ந்தான்.

''பெரியோர்களே! இந்தப் பையனின் பற்களைப் பாருங்கள்; எவ்வளவு உறுதியற்றிருக்கின்றன!'' என்று கூறிச் சிறுவனின் ஒரு பல்லை அவன் ஆட்டினான். உண்மையாகவே அது ஆடத்தான் ஆடியது!

''இதோ பாருங்கள்! இந்தப் பற்பொடியை இப்போது இவன் தேய்க்கப் போகிறான். உடனே பல் எவ்வளவு உறுதி அடைகிறது பாருங்கள். பிறகு இவன் எப்படி அநாயாசமாகக் கண்ணாடித் தூள்களைக் கடித்து உமிழ்கிறான், பாருங்கள்!''—மீண்டும் உடுக்கைச் சத்தம்.

எவனோ ஒரு சிறுவன், 'அம்மா' என்று கூவவே, பெரியவர் ஒருவர், ''டேய், சத்தம் போடாதே!'' என்று அதட்டினார்.

உடனே நடுவில் நின்றிருந்த அந்தச் சிறுவன் பற்பொடியில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுத் தேய்த்தான்.

அந்த ஆசாமி ஒரு பொட்டலத்தைப் பிரித்தான். ''இதோ பாருங்கள், இந்தக் கண்ணாடித் தூள்களை இவன் எவ்வளவு சுலபமாகக் கடித்து நொறுக்குகிறான் பாருங்கள்!'' என்று கூறிப் பெரியவன் அவன் வாயில் ஒரு சிட்டிகைத் தூளைப் போட்டான்.

பையன் நறநறவென்று கடித்துத் தூள்களைக் கீழே உமிழ்ந்தான். எல்லாருடைய முகத்திலும் ஆச்சரியம் தாண்டவமாடியது. அஜந்தாச் சிற்பம் போல அசையாமல் உட்கார்ந்து விட்டேன். ஒரு வயதான கிழவர் மூக்கின்மேல் விரலை வைத்தார். ஒரு பெண்மணி, ''பையன்பல் ஒரு நொடியிலே எவ்வளவு உறுதியாயிடுச்சு, பார்த்திங்களா!'' என்றாள். எனக்கோ வேர்த்துக் கொட்டியது.

மீண்டும் அவன் குடுகுடுவென்று தட்டினான். பையன் வாயைக் கொப்புளித்துவிட்டு, கீழே அம ரிக்கையாக உட்கார்ந்தான்.

கையில் ஒரு பை நிறைய அந்தப் பொட்டலங்களை வாரிக்கொண்டு, சுற்றிலும் டமாரம் அடித்தபடி, "இவ்வளவு உசத்தியான பல்பொடி யை எங்கள் கம்பெனியார் தயாரித் துள்ளனர். கருவேலம் பட்டை, சுக்கு, மிளகு, ஜாதிபத்திரி, காட்டு முருங்கை, ரசகர்ப்பூரம், இவைகளால் தயாரிக் கப்பட்ட இந்த அதியற் புதமான பல் பொடியை இனமாக விநியோகம் செய்ய நிச்சயித்திருக்கி றார்கள். ஆனல் இதைத் தயாரிக்கப் பொட்டலம் ஒன்றுக்கு நாலணு செலவு ஆகிறது. ஆகை யால் குறைந்த விலைக்கு, அதாவது ஓரணவுக்கு ஒரு பொட் டலம் வழங்கும்படி உத் தரவிட்டிருக்கிறார்கள். ஐந்து பொட்டலம் வாங்கினல் நாலணு!" என்று அவன் கூவினன்.

"ஒன்று ஓரணு, அஞ்சு நாலணு!"

"எனக்கு ஒண்ணு", "இங்கே அஞ்சு கொடுப்பா", "அதோ அங்கே அந்த அம்மா வுக்கு அஞ்சு வேணு மாம்!" என்ற குரல்கள் ஒன்றையொன்று மோதின!

சரசரவென்று முந்நூறு பொட் டலங்களுக்கு மேல் விற்பனை யாயின. சட்டில் காசும் குவிந்தது.

கடைசியில் பத்துப் பொட்ட லங்கள்தான் மிஞ்சின. அவன் மீண்டும், "பணம் கொடுத்து வாங் கச் சக்தி இல்லாதவர்களுக்கு இதை இனமாகத் தருகிறேன்" என்று விநியோகம் செய்ய ஆரம் பித்தான்.



நானும் 'ஒசி'யில் ஒன்று வாங்கிக்கொண்டேன். கூட்டம் பரபரவென்று கலைந்தது. அவன் மூட்டையைக் கட்டிக்கொண்டு, பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு கிளம்பினான். ஆனால் எனக்கு மாத்திரம் உள்ளூறச் சந்தேகந்தான்! ஆகையால் நானும் அவனைப் பின்தொடர்ந்தேன். பற்பொடியைத் தேய்த்த அந்தச் சிறுவனும் என்னோடு கூடவே வந்தான். நாலைந்து சந்துகள் தாண்டியிருப்போம். நான் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தேன். அவனுடைய மல் ஜிப்பா காற்றில் புசு புசுவென்றது.



பையன், "ஸார்..!" என்று ஈனஸ்வரத்தில் இழுத்தான்.

"இந்தாடா, இந்த நாலணுவை வச்சுக்கோ! காபி கீபி சாப்பிடு!" அவன் நாலணு நாணயத்தை அந்தப் பையனிடம் அலட்சியமாக வீசி எறிந்தான். பையன் பரம குஷியோடு தலைகால் தெரியாமல் ஓட்டம் பிடித்தான்.

பின்பு அவன் என் பக்கமாகத் திரும்பி, "என்ன தம்பீ, எங்கே போகணும், என்னோடேயே வர்றியே!" என்றான்.

"நீ எங்கே போவணும்?"

"அடையாற்றுக்கு!"

"ஓகோ! நானும் அங்கேதான்!" என்று வாய் தழுதழுக்காமல் புளுகிவிட்டேன்.

அவன் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். "தம்பி! நீ அறியாதவன். நான் வித்தை கித்தை செய்யறவன் இல்லே! பல்பொடி விற்கும் ஏஜண்டுதான்! காலையிலிருந்து ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினதுதான் மிச்சம். ஒரு பொட்டலங்கூட விலையாகவில்லை. ஒரு பொட்டலம் விற்றால் எனக்குக் காலணு கமிஷன் உண்டு. யோசனை செய்து பார்த்தேன், எப்படிச் சரக்கைத் தள்ளுவது என்று. ஞாயிற்றுக்கிழமை வேறு, பீச் பக்கம் கூட்டத்துக்குக் கேட்பானேன். ஒரு சக்கை அடித்தேன்; எல்லாம் வாய்ச் சாதுரியந்தான்! சும்மா யாராவது பல்பொடி வாங்குவாங்களா லகுவில்? தந்திரம் வேணுமா, சொல்லு எந்த விஷயத்திலும்?"—நான் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

"ரொம்பக் கெட்டிக்காரனா இருக்கியே!" என்றேன் நான்.

"அதுவே ஒரு மாயஜால மாச்சே!" என்று சொல்லிவிட்டு நான் சிரித்தேன்.

"அது சரி, அந்தப் பையன் யாரு? அவன் எப்படிக் கண்ணாடித் தூளைக் கடித்தான்; பல்லில் ரத்தம் வராதா?" என்று உடனே அவலோடு கேட்டேன்.

"பைத்தியமே, கண்ணாடித் தூளா அது! கல்கண்டுத்தூள் அது. வரும்வழியிலே ஓர் அரையணுவுக்குப் பொடிக் கல்கண்டா வாங்கிண்டேன். அதைத்தான் பையன் கடித்தான். கரும்பு தின்னக் கூலியா? அதோடு கூட அந்தப் பையனை எனக்குத் தெரியும். அதனால்தான் சட்டுனு கூப்பிட்டவுடனே வந்தான்!"

எனக்கு மொத்த விஷயமும் புரிந்து விட்டது. 'அந்தப் பல்பொடியை விற்பது பிரம்மப் பிரயத்தனம்! அதனால்தான் அவன் தந்திரமாக வேடிக்கை காட்டுவது போல், கூட்டத்தைக் கூட்டி, மக்களை மயக்கியிருக்கிறான்' என்று நொடியில் விஷயத்தை ஊகித்துக் கொண்டேன்.

பஸ் வரவே ஏஜண்டு, "வரேன் தம்பி, எல்லாம் மாய ஜாலம்!" என்று விடைபெற்றுக் கொண்டான். நிலைமையைச் சமாளித்துக் கொள்ள எனக்குப் பத்து நிமிஷம் பிடித்தது. நல்லவேளை, வழியில் எங்கும் தலை சுற்றி விழாமல் வீடு வந்து சேர்ந்ததே ஒரு மாய ஜாலந்தான். நானா நடந்து வந்தேன்? அதுவும் ஒரு மாய ஜாலந்தானோ என்னவோ?

# பாசம்

ஜ. சாமிநாதன்

காலை பத்து மணி. ஞாயிற்றுக் கிழமை. ரகுராமையர் சாப்பிட்டுவிட்டு எதிர்வீட்டு ஏகாம்பர ஐயரிடம் கொரியாப் போரிலிருந்து கொத்தவரங்காய் விலை வரையில் அலசி அலசிப் பேசிக் கொண்டிருந்தார்.

அவருடைய கடைசிப்புத்திரன், "அப்பா, அப்பா, அண்ணா என்னை அடிச்சுட்டான்" என்று கத்திக் கொண்டே வந்து முறையிட்டான்.

ரகுராமையருக்கு முன்கோபம் அதிகம்.

"எங்கே, அவனைக் கூப்பிடு! தம்பியைப் பார்த்துக்கொள்ளத் தெரியாவிட்டாலும் அடிக்கத் தெரிகிறது. கூப்பிடு, முதுகிலே மத்தளம் வாசிக்கிறேன்" என்று இரைந்தார்.

"இதோ வந்துட்டான் அப்பா. எனக்குக் கன்னங்கூட வீங்கிப் போச்சு!" என்று சொல்லிக் கொண்டே கோபு வரும் வழியைப் பார்த்தான் மோகன். மெல்லத் தன் கன்னங்களை வருடிக் கொண்டே நிற்கும் அவன் தோற்றம் மிகவும் பரிதாபமாக இருந்தது.





இரண்டு பையன்களின் முகபாவம்
மேலே மாமாவின் முகபாவம்

என்ற கோபம் வேறு. எதற்கும் தயார் செய்து கொண்டு மௌனமாக நின்ருன் கோபு.

"புத்தகத்தை எடுத்தால் என் கிட்ட சொல்லக் கூடாதாடா? நீ எதுக்குடா அடிச்சே?"

ரகுராமையரின் கோபம் அதிகமாகிக் கொண்டே வந்தது. அப்பாவின் வார்த்தையில் கடுமை மிகுந்திருப்பதைக் கண்ட கோபு செய்வது அறியாமல் திகைத்தான். ஏதாவது சொல்லலாம் என்ருலோ பயத்தால் நா எழவில்லை.

கோபுவின் கண்ணிலோ நீர் முட்டிக் கொண்டிருந்தது. கடைசியில் தணிந்து, "இல்லேப்பா, தம்பி தானேன்னு அடிச்.." என்று தொடங்கினுன்.

"ஏண்டா கோபு, மோகனை அடிச்சே? ரொம்பத் துளிர்த்துப் போய்விட்டதா உடம்பு?" என்று ரகுராமையர், தயங்கிக்கொண்டே வந்த கோபுவை மிரட்டத் தொடங்கினுர்.

"இல்லேப்பா, மோகன் என் புத்தகத்தை எடுத்தான். எடுக்காதேடான்னு சொன்னேன். அதற்குப் பிறகும் எடுத்ததினுலே மெதுவாக அடித்தேன்." - கோபுவின் குரலில் நடுக்கம் நிறைந்திருந்தது. அப்பா என்ன செய்வாரோ என்ற கலக்கம் வேறு. மெதுவாக அடித்ததைத் தம்பி இவ்வளவு தூரம் பெரியதாக்கி விட்டானே

கோபுவின் கன்னத்திலே பளீர் என்று ஓர் அறை விழுந்தது.

"ஆ! அம்மா" என்று உரக்கச் சத்தமிட்டான். கோபுவால் அந்த அடியைத் தாங்க முடியவில்லை; கத்திக் கொண்டே விழுந்துவிட்டான். ரகுராமையருக்கே ஏன் அடித்தோம் என்று ஆகிவிட்டது. ஆனுல் மறுகணமே, 'தம்பி என்னும் பாசம் இல்லாமல் மோகனைக் கோபு அடித்தது தப்பு' என்று எண்ணியது அவர் மனம்.

அன்று சாயங்காலம் ரகுராமையர் கடற்கரைக்குப் புறப்பட்டார்.

எதிரே வந்த மோகனை, "ஏண்டா மோகன், நீ பீச்சுக்கு வருகிறாயாடா?" என்று கேட்டார்.

"உம்! வரேன். வேறு சட்டை, நிஜார் போட்டுக் கொண்டு வரேன்."

"சரி, சரி. சீக்கிரம் வா" என்று அவசரப்படுத்தினார் ரகுராமையர்.

"அப்பா! பீச்சுக்குக் கோபுவும் வரட்டுமே அப்பா" என்று மெல்லப் பரிவுடன் கேட்டான் மோகன். 'காலையில்தான் கோபுவின் கையால் அடிபட்டிருந்தான் மோகன். அதற்குள் அதை அவன் மறந்து விட்டானா? அப்பாவுடன் தனிமையில் செல்வதை விட்டுத் தன் அண்ணனையும் அழைக்கிறானே! அண்ணன் தம்பி என்ற பாசம் குழந்தை உள்ளத்திலே இருக்கத்தான் இருக்கிறது' என்று ரகுராமையர் எண்ணினார்.

சென்னை-600 0



"சரி, சரி. அந்தக் கழுதையையும் கூப்பிட்டுத் தொலை" என்று வேண்டா வெறுப்புடன் சொன்னார். சின்னக் குழந்தையைக் கோபு அடித்ததனால் ஏற்பட்ட கோபம் இன்னும் தீரவில்லை.

கடற்கரையிலே கோபுவும் மோகனும் மண்ணில் கோபுரம் கட்டிக்கொண்டிருந்தனர். ரகுராமையரும் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். பொழுது சாய்ந்துவிட்டது. குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்படத் தொடங்கினார் ரகுராமையர். அப்பொழுது திடீரென்று மோகனின் கைவிரலைப் பார்த்தார்.

"ஆ! இது என்ன! மோகனின் விரலிலிருந்த தங்கமோதிரம் காணவில்லையே" என்று அவர் உள்ளம் பதறியது.

"மோகன், மோதிரம் எங்கேடா?"—மோகன் பேந்தப் பேந்த விழித்தான்.

"எங்கே என்று கேட்கிறேன். பதில் சொல்லாமல் இருக்கிறேயேடா! மோதிரம் எங்கே?" என்று பதற்றத்துடன் அவர் மறுபடியும் கேட்டார்.

கோபு பார்த்தான். 'அப்பாவுக்கு எதற்கெடுத்தாலும் திடீ

றென்று கோபம் வந்துவிடும். கோபத்தில் கண் மூக்கு தெரியாமல் அறைந்துவிடுவார்' என்பது கோபுவின் சொந்த அநுபவம். 'அப்பாவின் அடியைத் தன்னல் தாங்க முடியும். ஆனல் மோகனல் பொறுக்க முடியுமா?' என்று எண்ணினன். மோகன் பதில் ஒன்றும் சொல்லாவிட்டால் அவன் அப்பாவிடம் அடிபடுவது நிச்சயம் என்பதைத் தெரிந்துகொண்டான். உடனே, "இல்லேப்பா, நான்தான் அவன் கிட்டேயிருந்து வாங்கிப் போட்டுண்டேன். அது....''-அதற்குமேல் அவனல் ஒன்றும் சொல்ல முடியாமல் தயங்கினன்.

"எங்கேடா? மென்று விழுங்குகிருயே? தொலேச்சுட்டையா?'' என்று கத்தினர் ரகுராமையர்.

கோபு மெள்ளத் தலேயை அசைத்தான். ரகுராமையர் கோபுவைப் பளீர் பளீர் என அடித்து நொறுக்கிவிட்டார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த மோகனின் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது. அப்பாவின் கோபம் அண்ணனின் மேல் திரும்பியது அவனுக்கு வருத்தமாக இருந்தது.

மோகன் சட்டென்று ஏதோ நினைவு வந்தவனய், "அப்பா அப்பா, மோதிரம்..'' ஏதோ சொல்லவந்த மோகனே, "சட், சும்மா இரு, பேசாதே'' என்று ரகுராமையர் திட்டினர்.

**எ**ல்லோரும் வீட்டுக்கு வந்தாகிவிட்டது. மோகன் அம்மாவிடம் நேரே ஓடிப்போய், 'ஹோ' என்று அழ ஆரம்பித்தான்.

"அம்மா, அம்மா! அப்பா வந்து அண்ணுவை அவன் ஒண்ணும் பண்ணுத போதே அடிச்சுட்டாம்மா'' என்று பெரிதாக அழுதுகொண்டே கூறினன். ரகுராமையரும் அங்கே வந்துவிட்டார். அவர் மோகன் கூறியதைக் கேட்டார்.

மோகன் மேலும் அழுதுகொண்டே, "நான் மத்தியானம் மோதிரத்தை அலமாரியிலே கழட்டி வைச்சேன் அம்மா. அப்பா கேட்டபோது நினைவு வரல்லே. அப்புறந்தான் நினைவு வந்தது'' என்று விம்மலுக்கிடையே கூறினன்.

இதைக் கேட்டவுடன் ரகுராமையரால் அங்கே நிற்க முடியவில்லே. திண்ணையிலே போய்ப் படுத்துவிட்டார்.

மறுபடி இரவு ஒன்பது மணிக்குத்தான் மனைவி எழுப்பிவிட்டவுடன் எழுந்து உள்ளே வந்தார்.

காலேயில் கோபு மோகனேத் தம்பி என்பதனல் அடித்ததாகக் கூறியது, தான் அதற்கு அடித்தது, மோகன் அடிபடுவான் என்று மாலேயில் கோபு தானே மோதிரத்தைத் தொலேத்ததாகக் கூறியது, மோகன் அழுதுகொண்டே அவன் நிரபராதி என்று கூறியது எல்லாம் சித்திரம்போல் அவர் மனத்தில் ஓடின.

தம்பிக்காகத் தான் உதை வாங்கிக்கொண்ட கோபுவை நினைத்தபோது ரகுராமையரின் மெய் சிலிர்த்தது.

அவர் கோபுவைப் பார்த்தார். அங்கே கோபுவும் மோகனும் கள்ளங் கபடு இல்லாமல் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தனர்.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

42. உமா, M., பூனு - 3. 43. உமார் ஷரீப், தூத்துக்குடி. 44. உமாகாந்தன், புதுச்சேரி. 45. உமையாள், A. L., சென்னை-17. 46. உமாகாந்த், S., திருக்காட்டுப்பள்ளி. 47. உஷா, நளினி, பம்பாய்-29. 48. உமாசங்கர், M., சென்னை - 11. 49. உமாமகேஸ்வரன், R., (விலாசம் இல்லை). 50. உத்தமன், A. R., சண்முகநாதபுரம். 51. உமாபதி, சென்னை-4. 52. உமாநாயகேஸ்வரன், (விலாசம் இல்லை). 53. உமா, M. R., பாலக்காடு. 54. உஷா, P. T., திருச்சி. 55. உமாதேவி, தாம்பரம். 56. உமையாள், R.M., சென்னை - 4. 57. உடையப்பன், M., பாகனேரி. 58. உத்தமன், A. R., சண்முகநாதபுரம். 59. உமாராணி, செங்கல்பட்டு. 60. உத்திராபதி, S., கும்பகோணம்.

(V) 269. வதூத், S. A., மேட்டுப்பாளையம். 270. வேலுசாமி, S. T., உடுமல்பேட்டை. 272. வைத்தியநாதன், M., புதுச்சேரி. 273. வெங்கடராகவன், R., லாலாபேட்டை. 274. வெங்கடாசலம், T. M., புதுக்கோட்டை. 275. வேலு. C.V. T., (விலாசம் இல்லை). 276. வைத்திலிங்கம், T., அய்யர்தூர். 277. வாசுதேவன், மதகுப்பேட்டை. 278. வீரராகவன், ராமசாமி, சுந்தரம், S., சாத்தூர். 279. விஸ்வநாதன், S., திருவிடமருதூர். 280. விமலா, A., டில்லி. 282. வெங்கடேசன், A., உஜ்ஜைனி. 283. வெங்கடராமன், P.S., சேலம். 284. விசாலாட்சி, T. C. N., பூவாளூர். 285. வடமலை, கஸ்தூரி, M., குடியாத்தம். 286. வேணுகோபால், R., குடியாத்தம். 287. வஸந்தா, வரதராஜன், V. S., அரக்கோணம். 288. வெங்கடராமன், M., கடலூர். 289. விஸ்வநாதன். R., சேலம். 290. வயிரவன், T. S., கல்லல். 291. வீரப்பன், ரமா, புதுவயல். 292. விசாலாட்சி, மீசலை. 293. வேணுகோபால், கோயம்புத்தூர். 294. வேலாங்கனி, V., மலாயா. 295. வெங்கடரமணி, T., மேலப்பாதி. 296. வடிவேலு, ராதாகிருஷ்ணன், S.,

இங்கே கத்தரிக்கவும்

**கண்ணன் கழகம்**

**அங்கத்தினர் பதிவு கூபன்**

(கட்டணம் இல்லை)

பெயர் ..........................

விலாசம் ..........................

..........................

பிறந்த தேதி ..........................

(தேதி, மாதம், வருஷம்)

ஏப்ரல். 1-'54 கூபன் நெ:

சீதாராமபாளையம். 297. வஸந்தா, T. R., காட்டுப்புதூர். 298. வெங்கடபதி, உடுமல்பேட்டை. 299. வெங்கடேசன், P., கந்தர்வக்கோட்டை. 300. வெங்கடேசன், G., திருவண்ணுமலை. 301. வரதராஜன், S., சென்னை-4. 302. விசுவநாதன், G., மதுக்கரை. 303. வெங்கடேசன், T. P., திருமழிசை. 304. வேணுகோபால், சத்தியமங்கலம். 305. வேலுசாமி, P., ஆண்டிப்பட்டி. 306. வெங்கடராமன், V., ஐயம்பேட்டை. 307. வேலு, P.R., பணகுடி. 308. விஜயசந்திரன், சாம்பசிவன், வெங்கடராமன், A., கல்கத்தா-29.309.வாசன், C.S., பரங்கிப்பேட்டை. 310. விசுவநாதன், S., சேலம். 311. வெங்கடராமன், J., மாயவரம். 312. வேங்கடராவ், R., திருநெல்வேலி. 313. வெங்கடராமன், R., மூலக்கல். 314. வயிரவன், G. T., கொழும்பு. 315. வஸந்தா, பத்மா, சாந்தா, S. R., வத்ஸலா T. S., பாலக்காடு. 316. வெங்கடாசலம், G., பெருந்துறை. 317. விமலநாதன், N. I., பூனு-2. 318. வேணுகோபால், T. R., பங்களூர். 319. வைத்தியநாதன், சென்னை-4. 320. விசாலாட்சி, V., டில்லி. 321. வாசுதேவன், P. N., வில்லிவாக்கம். 322. விஸ்வநாதன், K., கடலங்குடி. 323. வெங்கட விஜயன், M., சென்னை. 324. வரதராஜன், F., கொழும்பு 325. வெங்கடராமன், G., உடுமலைபேட்டை. 326. விஸ்வநாதன், N., மேட்டூர் அணை. 327. வேலாயுதம் பிள்ளை, M., காரைநகர். 328. வரதராஜன், R., கிருஷ்ணன், கல்கத்தா-26. 329. வடிவாம்பிகை, A., கோயம்புத்தூர். 330. விசாலாக்ஷி, S., உதகமண்டலம். 331. வெங்கடேசன், S. G., சிவப்பிரகாசம், சென்னை-4. 332. விஸ்வநாதன், V., உதகமண்டலம். 334. வெங்கடராமன், G. திருவையம். 335. விஸ்வநாதன், K., புதுடில்லி. 336. வடிவேலு P. G., சென்னை-1. 337. வெள்ளையப்பன் V. R., இலங்கை. 338. விமலா, V., சென்னை-17. 339. வைத்தியநாதன், வெங்கடராமன், பரசுராமன், குண்டக்கல். 340. வெங்கடராமன், S., சென்னை-5. 341. வேதரத்தினம், K., எத்தாப்பூர். 342. வாசுதேவன், கோட்டூர். 343. வாசுதேவன், N., கொல்முரி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

# கண்ணன்

## கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★

# மந்திர மோதிரம்

## எம். வி. கோபால்

ஜோதிபுரி என்ற ஊரில் ஓர் விறகு வெட்டி வாழ்ந்து வந்தான். அவன் பெயர் கறுப்பன். அவன் மனைவியின் பெயர் முருகாயி. கறுப்பன் மிகவும் நல்ல குணமுடையவன். கடவுள் பக்தி உள்ளவன். சிறிய பிராணிகளிடத்தில் மிகவும் அன்பு வைத்திருந்தான். அவன் விறகு வெட்டிக்கொண்டு வரும் பணத்தைக் கொண்டு அவனும் அவன் மனைவியும் திருப்தியாக ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் கறுப்பன் பக்கத்திலுள்ள காட்டுக்கு விறகு வெட்டச் சென்றான். விறகை வெட்டி ஒன்றாகக் கட்டினான். பிறகு ஓர் மரத்தின் கீழே களைப்பாறுவதற்கு உட்கார்ந்தான். அப்போது, கீ.. கீ..கீ...என்று சப்தம் கேட்டது. கறுப்பன் சப்தம் வந்த திசையை நோக்கினான். ஒரு மரக்கிளையில் பறவையொன்று கூடு கட்டியிருந்தது. அந்தக் கூட்டில் நான்கைந்து பறவைக் குஞ்சுகள் இருந்தன. அந்தப் பறவைக் குஞ்சுகளைத் தின்பதற்காக ஒரு பாம்பு மரத்தில் ஏறிக்கொண்டிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்டதும் கறுப்பன் பறவைக் குஞ்சுகளின் மேல் இரக்கம் கொண்டான். அவைகளைக் காப்பாற்றுவதற்காகத் தன் கோடாலியால் பாம்பைக் கொன்றான். பறவைகளின் குஞ்சுகள் உயிர் தப்பின. தங்கள் உயிரைக் காப்பாற்றியவனை நன்றியுடன் அந்தக் குஞ்சுகள் நோக்கின.

கறுப்பன் விறகுக்கட்டை எடுத்துக்கொண்டான். அதை விற்பதற்காகப் பக்கத்திலுள்ள பெரிய பட்டணத்திற்குப் புறப்பட்டுச் சென்றான்.

**ப**றவைகள் தங்கள் தாய் வந்ததும் கறுப்பன் தங்களைக் காப்

---

### பொய்!




**ஏழு கோடியே எண்பது லட்சத்து, தொண்ணூற்று ஒன்பதாயிரத்து, தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டு......**

பாற்றியது பற்றிக் கூறின. தாய்ப் பறவை மிகவும் சந்தோஷ மடைந்து கறுப்பனுக்கு ஏதாவது நன்மை செய்யக் கருதியது. அந்தப் பறவையினிடம் ஒரு மோதிரம் இருந்தது. அந்த மோதிரத்தைக் கறுப்பனுக்கு வெகுமதியாக அளிக்க அது தீர்மானித்தது.

மறுநாள் கறுப்பன் வழக்கம் போல் விறகு வெட்டக் காட்டுக் குச் சென்றான். விறகுகளை வெட் டிய பிறகு ஒரு மரத்தின் கீழே அமர்ந்தான். அப்போது பறவைக் குஞ்சுகள் தங்கள் தாயிடம், கறுப்பனைக் காட் டின. உடனே தாய்ப்பறவை கறுப்பன் முன்னால் வந்து, ''ஐயா! தாங்கள் என் குழந்தைகளைக் காப் பாற்றியதற்காக மிகவும் நன்றி. அதற்கு வெகுமதியாக நான் தங் களுக்கு ஒரு மோதிரம் கொடுக் கிறேன். அந்த மோதிரம் மந்திர சக்தி உடையது. நீங்கள் நினைத் தது எல்லாம் கிடைக்கும். ஆனால் ஒரு தடவைதான் அதை உபயோ கிக்கமுடியும்'' என்று கூறி மோதி ரத்தைக் கறுப்பனிடம் கொடுத்து விட்டுப் பறந்துபோயிற்று.



கறுப்பன்மோதி ரத்தைத் தன் மடி யில் பத்திரப் படுத்தி, விறகை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். பட்டணத்தில் விறகை விற்று விட்டு, வீட்டிற் குப் புறப்பட் டான். வரும் வழியில் ஒரு மோதிரக் கடை யைக் கண்டான். உடனே அந்தக் கடையில் தன் னிடமுள்ள மோதிரத்தைப் போல் வேறொரு மோதிரத்தைக் கடைக்கார னிடம் எடுக்கச் சொல்லி, அதன் விலையைக் கேட் டான். கடைக் காரன் அதன் விலை 150 ரூபாய் என்று கூறினான்.

அதைப்பார்த்த கறுப்பன் சிரித்து, "ஐயா! தாங்கள் இந்த மோதிரத்திற்கே இவ்வளவு விலை சொல்லுகிறீர்களே, அப்படியானால் என்னிடமுள்ள இந்த மந்திர மோதிரத்திற்கு எவ்வளவு விலை இருக்கும்! இந்த மோதிரத்தால் நினைத்ததெல்லாம் அடையலாமே!" என்றான்.

உடனே கடைக்காரனுக்கு அந்த மந்திர மோதிரத்தை எப்படியாவது அடையவேண்டும் என்று தோன்றியது. புதிய ஒரு யோசனையும் தோன்றியது. "ஐயா, தங்களிடம் மந்திரசக்தி இருப்பதால் நான் தங்களை வணங்குகிறேன். தாங்கள் இன்று இரவு என் வீட்டில் தங்கிவிட்டு, நாளைக் காலையில் போகலாம். மந்திர சக்தி உள்ளவர்களை உபசரிப்பது எங்கள் வழக்கம். ஆகையால் தாங்கள் மறுக்கக் கூடாது" என்று கூறினான்.

கறுப்பனும் அதை உண்மை என்று நம்பினான். கடைக்காரன் கறுப்பனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அன்றிரவு கறுப்பனுக்குப் பெரிய விருந்து நடந்தது. கடைக்காரன் கறுப்பனுக்கு அழகிய மெத்தை ஒன்றைப் படுத்துக்கொள்ள அளித்தான்.

இரவு 12 மணி இருக்கும். கறுப்பன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். கடைக்காரன் மெல்ல எழுந்து கறுப்பனிடமுள்ள மந்திர மோதிரத்தை எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாக ஒரு சாதாரண மோதிரத்தை வைத்துவிட்டான். மறுநாள் விடியற்காலையில் கறுப்பன் தன் வீட்டிற்குப் புறப்பட்டான். அவன் வீட்டிலிருந்து வெளியே போனதும் கடைக்காரன் மந்திர மோதிரத்தை எடுத்துக்கொண்டு ஓர் அறைக்குச் சென்றான். அறைக் கதவைத் தாழிட்டான். மந்திர மோதிரத்திடம், "இப்போது இந்த அறை நிறையப் பணம் குவியட்டும்" என்றான்.

அந்தக் கணமே பொலபொலவென்று பணம் கீழே குவிய ஆரம்பித்தது. அதைக் கண்டு கடைக்காரன் ஆனந்தம் கொண்



டான். ஐயோ, பாவம்! பணம் அவன் தலையின் மேலேயே விழ ஆரம்பித்தது. அவனால் அந்த வேதனையைப் பொறுக்க முடியவில்லை. பலத்த அடியால் அவன் தேகத்தில் ரத்தம் வழிந்தது. அப்படியே கீழே விழுந்தான். பணத்தின் அழுத்தம் தாங்காமல் அந்த அறையின் தரை வெடித்து அவனும் அந்தப் பணத்துடன் மண்ணோடு மண்ணானான்.

வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்ற கறுப்பன் தான் மந்திர மோதிரம் கொண்டுவந்திருப்பதாக மனைவியுடன் கூறினான். இருவரும் அந்த மோதிரத்திடம் என்ன கேட்கலாம் என்று யோசித்தனர். ஒன்றும் புலப்படவில்லை.



கடைசியில் கறுப்பனது மனைவி தங்களுக்கு நன்றாகப் பால் தரும் ஒரு பசு வேண்டும் என்று கேட்கும்படி கறுப்பனிடம் சொன்னாள். ஆனால் கறுப்பனுக்கு ஒரு பசுவுக்காக மந்திரத்தை இழக்க மனமில்லை. ஆகையால், "நாம் இன்னும் நன்றாக உழைத்தாலே ஒரு பசு வாங்கிவிடலாம்" என்று கூறினான்.

அதன்படியே அன்று முதல் இருவரும் நன்றாக உழைக்க ஆரம்பித்தனர். சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து ஒரு பசு வாங்கினர். பாலை விற்று மேலும் பல பசுக்கள் வாங்கினர். அவர்களிடம் லக்ஷ்மி தேவி தன் கடாக்ஷத்தைத் திருப்பினாள். அவர்கள் ஓர் அழகிய வீடு கட்டிக்கொண்டனர். நிலங்கள் பல வாங்கினர். எல்லாம் அவர்கள் உழைப்பினால்தான். அவர்கள் மந்திர மோதிரத்தை உபயோகிக்கவில்லை. இப்படியே பல காலம் வாழ்ந்து வந்தனர். அது மந்திர மோதிரமல்ல, சாதாரண மோதிரந்தான் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்!

மந்திர மோதிரத்தை உபயோகப்படுத்திய கடைக்காரன் அதனால் அழிந்தான். ஆனால் அதை உபயோகிக்காமல் கறுப்பன் உயர்ந்த நிலையை அடைந்துவிட்டான்.




அசட்டுப் பிச்சு தலையைச் சொறிந்துகொண்டான். அவனுக்குத் திடீரென்று மேலே என்ன பேசுவது என்று தெரியவில்லை. வழக்கம்போல், ஞாபக மறதியும் குழப்பமும் வந்துவிட்டன. அவன் ஸோபாவில் போய் உட்கார்ந்துகொண்டு, ''என் ஸார், நீங்க குமாரி கல்பலதாவின் தகப்பனுர்தானே!'' என்று கேட்டான். அவன் எதை எண்ணிக் கொண்டு இப்படிக் கேட்டானே அது அவனுக்கே சரிவரத் தெரியாது. ஆனுல் அந்த மீசைக்காரக் கிழவர், அசட்டுப் பிச்சு இப்படிக் கேட்டதும் அப்படியே திகைத்துப் போனுர்.

''என்ன தம்பி சொல்றீங்க'' என்று திருப்பித் திருப்பிக் கேட்டார். அப்பொழுதெல்லாம் அவருடைய மீசை படபடவென்று துடித்துக்கொண் டிருந்தது. அது கோபத்தினுல் என்னவோ துடிக்கவில்லை; பயத்தினுல்தான் துடித்தது என்பது நிச்சயம். பக்கத்திலே நின்ற குமாரி கல்பலதாவுக்குக்கூட, அசட்டுப் பிச்சுவின் கேள்வி வேடிக்கையாக இருந்தது.

கிழவர் சுற்று முற்றும் பார்த்தார். அங்கே அசட்டுப் பிச்சுவைத் தவிர வேறு யாராவது இருக்கிறுர்களா என்று வாசலில் போய்ப் பார்த்தார். உடனே திரும்பி வரும்போது ஜாக்கிரதையாகக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு வந்தார். மெதுவாகப் பிச்சுவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு அவனுடைய இரண்டு கைகளையும் சேர்த்துக் கையில் எடுத்துக்கொண்டார். இதுவரையில் நடந்தது பிச்சுவுக்கும், கல்பலதாவுக்கும் அதிசயமாகத்தான் இருந்தது. ஏனென்ருல், மீசைக்காரருடைய முன் கோபம் எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. வேறு ஒருவன், பிச்சு கேட்டமாதிரி கேட்டிருந்தால் அவன் கதி இத்தனை நாழிகையில் என்ன ஆகியிருக்குமோ தெரியாது. அப்படிப்பட்டவர் இப்போது பயந்தமாதிரி நடந்து கொள்வது அதிசயப்பட வேண்டியதுதானே!

''என்ன தம்பி! இங்கே ஏதோ முக்கியமான காரியமா வந்திருக்கிறதாகத்தான் எனக்குப் படுது. இல்லாட்டிப் போனு நீங்க என் எங்க வூட்டுக்கு வர்ரப் போறீங்க. நீங்க பட்டணம் வரைக்கும் போய்ப் பெரிய பெரிய கேசெல்லாம் கண்டு பிடிச்சிருக்கிறதாக எல்லாரும் சொன்னுங்க. நம்ப விஷயத்தி

லேயும் நீங்க கண்டுபிடிச்சுத்தான் இருக்கீங்க. ஆகையினலே உங்க மனசுலே ஏதாவது சந்தேகம் இருந்தா அதைத் தயவு பண்ணி எங்கிட்டச் சொல்லிப்பிடுங்க. தீர்த்து வைக்கிறேன். நீங்க இங்கே வந்தது நல்லதாப் போச்சு'' என்று அவர் வெகு நிதானமாகவும் உருக்கமாகவும் கேட்டுக் கொண்டார்.

''இல்லே, தாத்தா. சும்மாத்தான் நான் கேட்டேன். உங்களைப் பார்த்தால் வயசு 60,70 இருக்கும் என்று படுகிறது. இந்தப் பெண்ணுக்கோ எங்க வயசுதான் இருக்கும்போல இருக்கு. அதனலே..' என்று பிச்சு சமாதானமாகச் சொல்ல வருவதற்குள் கிழவரின் பரபரப்பு இன்னும் அதிகமாயிற்று. எழுந்திருந்து தோளைப் பிடித்துக் கொண்டு, ''தயவு பண்ணு, தம்பி; உள்ளதைச் சொல்லு, தம்பி; மனசு திறந்து பேசு'' என்று தயவாகக் கேட்டுக் கொண்டார் மீசைக்காரக் கிழவர்.

பிச்சு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். கிழவரோ பிச்சுவை விடும் வழியாய் இல்லை. அசட்டுப் பிச்சுவின் பெயர்தான் பிரபலமாகி விட்டதே. அவன் பேச்சு ஓடாமல் கேட்டேன் என்ருலும், சாதாரணமாகக் கேட்டேன் என்ருலும் யார் அவன் பேச்சை அப்படியே எடுத்துக் கொள்ளப் போகிருர்கள்? கிழவருக்குச் சந்தேகம் வலுத்தது. 'சரி, இவன் எதையோ வெளிப்படுத்தத்தான் வந்திருக்கிருன்' என்று எண்ணிக்கொண்டார்.

அதற்குள் குமாரி கல்பலதா இந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல், ''ஆமாம். அவர்தான்



எங்கள் அப்பா. நான் அவர் பெண். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தானே? இதற்குப் பயம் என்ன வந்தது'' என்று கம்பீரமாகச் சொன்னாள்.

''அவர் உங்கள் அப்பா தானே? அதைத்தான் கேட்டேன்'' என்றான் பிச்சு.

கிழவருக்கு என்னவோ யோசனையாகப் போயிற்று. இனிப் பேச்சை வளரவிடக் கூடாது என்று எண்ணி, ''இந்தா அம்மா, நீ பேசாமல் போ. நான் தம்பி கிட்டக் கொஞ்ச நேரம் தனியாப் பேச வேண்டி யிருக்கு'' என்று கல்பலதாவை உள்ளே அனுப்பிவிட்டு மறுபடியும் பிச்சுவின் பக்கத்திலே வந்து உட்கார்ந்துகொண்டார்.





“தம்பி, என்னை நீதான் காப்பாத்த வேணும். நீ சாமானிய மனுஷன் அல்ல. இந்த விஷயம் ஒருத்தருக்குமே தெரியாது என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். உனக்கு எப்படியோ அது தெரிந்துவிட்டது. என்னைக் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு. நான்தான் அவள் அப்பா என்று இந்தப் பெண், இதுவரையில் எண்

ணிக்கொண்டு வந்திருக்கிறது. அறுபத்துமூவர் உற்சவத்தின் போது கிடைத்த குழந்தைதான் இது. கழுத்திலே சங்கிலி போட்டுக்கிட்டு, கும்பலில் தனியாக மாட்டிக்கிட்டு கதறு, கதறுன்னு கதறிக்கிட்டு, இருந்தது, பாவம்! குழந்தைதானே என்று 'இந்தாம்மா! பாப்பா' என்று, தூக்கினேன். சட்டென்று அழுகையை நிறுத்திடுத்து. அரிசிப் பல்லைக் காட்டிச் சிரித்தது. அப்படியே தூக்கிக் கொண்டாந்துட்டேன். அன்றையிலிருந்து நான்தான் இதற்கு அப்பா; என் சம்சாரந்தான் இதற்கு அம்மா'' என்று கிழவர் அழ மாட்டாத குரலில் கூறினார்.

''அது சரி; பிறகு அதன் பெற்றோர்களிடம் சேர்க்கவேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவே இல்லையா?'' என்று மட்டும் கேட்டான் பிச்சு.

''தோணித்து. தோணுமல் இல்லை. பத்திரிகையிலே அந்தக் குழந்தையின் தகப்பனர் விளம்பரங்கூடக் கொடுத்திருந்தார். அதுவும் என் கண்ணிலே பட்டது. ஆனு அவங்க பிள்ளையைத் திருடிப் போய்விட்டதாகக் கேஸ் வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது. மேலும் என் சம்சாரம் இருக்கிருளே, அவளுக்குப் பிள்ளை இல்லை என்கிற குறை. வளர்த்த பாசம். இதனுலெல்லாம் திருப்பிக் கொண்டுவிடவில்லை'' என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து அலமாரியைத் திறந்து பழைய பத்திரிகைக் காகிதம் ஒன்றை எடுத்துக் காட்டினர்.

பிச்சு, அந்த விளம்பரத்தை மேலும் கீழும் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்தினுடைய அப்பாதான் அந்த விளம்பரத்தைப் பதினைந்து வருஷங்களுக்கு முன் கொடுத்திருந்தார். 'அட பாவமே! இரண்டு பேரும் ஒரே ஊரில் வந்து சேர்ந்திருக்கிருர்கள். உண்மை வெளிப்படாமல் இருந்திருக்கிறதே' என்று பிச்சு அதிசயப்பட்டுக்கொண்டான்.

இவ்வளவு நேரம் இவர்கள் பேசியதைக் கல்பலதா கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். ஆனல் அவள் மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்தது இவர்களுக்குத் தெரியாது.

''சரி, நான் பிறகு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பிச்சு விடை பெற்று எழுந்திருக்கும்போது அவள் ஓடி வந்தாள். ''இதோ பார், நீதான் என் அண்ணன் மாதிரி. எனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் பொறுத்துக் கொள்கிறேன். என்னல் என்னை வளர்த்தவர்களுக்கு ஒரு கஷ்டமும் வரக்கூடாது'' என்று கல்பலதா பிச்சுவைக் கேட்டுக் கொண்டாள்.

''சரி. நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் ஒரு கவலையும் படவேண்டாம்'' என்று சொல்லிவிட்டுப் பிச்சு வீட்டைவிட்டு வெளியேறினன்.

மண்டிக் கடை ஐயாசாமி உக்கிரமூர்த்தியாய் அப்பொழுது எதிரே வந்துகொண்டிருந்தார்.

(அடுத்த இதழில் முடியும்.)



# எங்கள் பகுதி

## *பொக்கிஷங்களில் ஒன்று

கடந்த 1-3-'54 இதழ் 'கண்ணனி'ன் அட்டைப் படம் அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைந்திருக்கிறது.

எஸ். ரங்கநாயகி அவர்கள் எழுதிய 'மாமாவின் விஜயம்' நாடகம் ஏ ஒன்! பாவம், சுப்புமணியின் மண்டையில் உதித்த பிளானை அப்படியே நிஜமென்று நம்பி வீட்டிற்குக் கம்பி நீட்டும் மாமாவை நினைக்கும்போது இப்போதுகூட எனக்குச் சிரிப்பு வருகிறது. இம்மாதிரி வேடிக்கை நாடகங்களும் கதைகளும் 'கண்ணனி'ல் அடிக்கடி வரவேண்டும்.

'பாலகுமாரி'ல் டைகர் செய்யும் வேலை மிகவும் வியப்பாக இருக்கிறது.

'அசட்டுப் பிச்சுவைச் சந்தித்தேன்' கதையும் வேடிக்கையானது. அந்த அசட்டுப் பிச்சுவை இந்த 'அசடு' போயும் போயும் கனவிலா சந்திக்க முயல வேண்டும்? இறுதியில் ஆசிரியர் 'டூப்' விட்டு டபாய்ப்பது சற்று வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

'வாலில்லாக் குரங்கு' நம்ப முடியாத கதை. என்றாலும் அவசர புத்தி ஆபத்தானது என்ற நீதியைப் புகட்டி நிற்பது வரவேற்கத் தகுந்தது.

'அசட்டுப் பிச்சு'வுக்குக் குருட்டு யோகம் அடிக்கிறது. இல்லையானால் எதிர்பாராத விதமாகப் பிச்சுவின் கண்களிலே ரங்கூன் ஆசாமி அகப்பட்டிருப்பானா? பாவம், வேடிக்கையைப் பார்க்கப் போகும் இடத்திலும் இந்த மாதிரி 'வம்பு' விஷயங்கள் சுற்றி, அவனைத் திணற அடிப்பது வேடிக்கைதான்!

'சந்திரகிரிக் கோட்டை' எதிர்பார்த்ததைவிட விறுவிறுப்பாகப் போகிறது. தொடர் கதையைப் படிக்க அடுத்த இதழுக்காக ஏங்கி நிற்கவேண்டி இருக்கிறது.

24-ஆம் பக்கத்திலிருக்கும் துணுக்கில் ஹாஸ்யம் நிரம்பியிருக்கிறது. ஆனால் 22-ஆம் பக்கத்

* இந்த இரண்டு கடிதங்களுக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திலுள்ளது அவ்வளவாகச் சோபிக்கவில்லை.

எதைப்பற்றியாவது யோசித்துவிட்டுப் படுத்தால் அது கனவு மாதிரி வருகிறது என்பது முற்றும் உண்மை. பாவம், வாழ்க எவரெஸ்ட் ஏகாம்பரம்!

கண்ணன் வார இதழாக மாறினால் எங்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தெரியுமா?

—து. கருணாநிதி மோல்டன்,
திருவத்திபுரம்.

## * கண்ணனில் சில குறைகள்!

1-3-54-ஆம் தேதி 'கண்ணன்' இதழ் எப்பொழுதும்போலப் புகழுரை பாடுவதற்குத் தக்கவாறு விஷயங்களைக் கொண்டதாக இருக்கிறது. எனினும் - அவைகளைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு - எனக்குத் தென்பட்ட சில குறைகளையே இங்கு எழுத விழைகிறேன்.

'வீயெஸ்' அவர்களின் 'அசட்டுப் பிச்சுவைச் சந்தித்தேன்' படிக்க ஹாஸ்யமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு புதுமையான முறையாகவும் இருக்கிறது. எங்களுக்காக எழுதும் எழுத்தாளர்கள், தங்கள் எழுத்தோவியங்களில் சிலவற்றை இந்த முறையில் அமைத்துப் புதுமைகளைக் கையாண்டார்கள் என்றால் அது எல்லாருடைய கருத்தையும் கவராமலிருக்க முடியாது. நிற்க, 'வீயெஸ்' அவர்கள் மேற்படி விஷயத்தை வாசகர்களுக்கு நல்ல முறையில் படைத்திருக்கிறார். எனினும் அவர் அதில் போதிய கவனமெடுக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால், 'அசட்டுப் பிச்சு' - கதையின் முக்கிய பாத்திரங்களான, பிச்சு, வைத்தி, இன்ஸ்பெக்டர் குரூப் முதலியோர் தற்சமயம் சென்னை வாசம் செய்துகொண்டிருப்பதாகக் கதையில் கண்டிருக்கிறது. எனவே 'வீயெஸ்' பிச்சுவின் வீட்டிற்குப் போய், 'பிச்சு இருக்கிறானா?' என்று கேட்டு ஐயாசாமியைத் தொந்தரைக்குள்ளாக்குவது பொருத்தமில்லாமல் இருக்கிறது. அதுவும் போக, இவர் போகும் சமயத்திலே, இன்ஸ்பெக்டர் குரூப், ஐயாசாமியின் வீட்டிலிருந்து வெளியே போனார் என்று குறிப்பிட்டிருப்பதும் பெருந் தவறாகிறது. (சென்னைக்கு மாற்றலாகிய குரூப்பை இவர் பிச்சுவின் வீட்டில் சந்தித்திருக்க முடியுமா?)

தற்சமயம் நிகழ்ந்துவரும் 'அசட்டுப் பிச்சு' கதைப்படி, 'மெட்ராஸில் வைத்துச் சந்தித்தேன்!' என்று எழுதி, கடைசியில், 'எல்லாம் கனவு' என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட ஒப்புக்கொள்ளலாம். இதை ஏன் கூறுகிறேன் என்றால், கதையில் வரும் சம்பவங்களைப்பற்றி (பாத்திரங்களைப்பற்றி அல்லாது) எழுதும் வேறு பல விஷயங்களும் முன்னுக்குப் பின் முரணாக, பொருத்தமற்றவையாக இருக்கின்றன. எனவே, படிப்பவர்களுக்கு 'உண்மையில் நடக்கிற சம்பவம்' என்ற ஓர் உணர்வு தோன்றுகிறதில்லை. இதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும்.

தொடர்கதைகளான 'பாலகுமார்', 'அசட்டுப் பிச்சு', 'சந்திரகிரிக்கோட்டை' முதலியவைகள் குறை சொல்ல முடியாதபடி விறுவிறுப்பாகப் போய்கொண்டிருக்கின்றன. 'அசட்டுப் பிச்சு' போகிற

போக்கைப் பார்க்கும்போது, திரு 'ஆர்வி' அவர்கள் எப்படித்தான் கதையை முடிப்பார்களோ என்று திகைப்பாக இருக்கிறது. அவன் செய்கிற சாகஸங்களைக் கண்டு 'ஆர்வி' அவர்களே திகைத்துப் போயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. தொடர் கதைக்குப் போடும் பெயருடன் கூடிய படத் தலைப்புகளை மாற்றாமலிருந்து விடுவது என்னவோ போலிருக்கிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறையேனும் படத்தலைப்புகளை மாற்றிப் புதியதாகத் தலைப்புகள் பிரசுரிக்க வேண்டியது முக்கியமாகும்.

எப்படியெனினும் கடைசியாக எனக்கு ஒரே ஒருவர்மீது மட்டுந்தான் அடங்காத கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. அவர் யார் தெரியுமா? இந்தக் 'கண்ணன்' ஆசிரியர் தான். வேறென்னவாம்! 5-வருட காலமாக எங்கள் உள்ளத்தினுள் புகுந்து, என்றும் அகலாததொரு பொக்கிஷமாக இருந்து வரும் 'கண்ணனை'ப்பற்றி ஒரு நாளுமில்லாத திருநாளாகக் 'குற்றங் குறைகளை விளாசித் தள்ளுங்கள்' என்று விட்டாரே இந்த ஆசிரியர்! சை! சுத்த மோசம்! 'கண்ணன்' மேல் நாங்கள் வைத்திருக்கும் மாசற்ற அன்பு அழியாதது என்பது தெரியாத விஷயமா என்ன!

—எம். முகம்மது மக்கீன்,
கொழும்பு-10.

## திருட்டுக் கண்ணன்

1-3-'54 இதழ் அட்டைப்படத்தில் 'சுப்பு' அவர்கள் களங்கமற்ற மனத்தோடு, கவலையில்லாமல் விளையாடும் தம்பிகளை நன்கு வரைந்துள்ளார்.

'சந்திரகிரிக் கோட்டை'யில் விமலனின் மனத்தைத் தெள்ளிய நடையில் 'ஜனு' நன்கு வரைந்திருக்கிறார். விமலனின் மனம் ஒரு பக்கம் மண்ணாசையாலும், மற்றொரு பக்கம் அருளேந்தியின் வார்த்தைகளாலும் ஒரு நிலையில் வராமலிருக்கும் காட்சி விறுவிறுப்பின் உச்சநிலையை அடைகிறது.

'அசட்டுப் பிச்சு' வழக்கம்போல் சுவாரஸ்யமாகக் காட்சி அளிக்கிறது. பிச்சு சென்னைக்கு மறுபடியும் வந்தால் எங்கள் வீட்டுக்கு அனுப்புங்கள். அவனுக்கு ஒரு டீ பார்ட்டி வைக்கலாம் என்றிருக்கிறேன். 'பாலகுமார்' ஜம்மென்றிருக்கிறது.

'மாமாவின் விஜயம்' பஸ்ட் கிளாஸ். மாமாவிடம் கடிதத்தைப் பற்றி, சுப்பு கூறும் பெரிய 'டேப்' நன்கு கதையில் விளங்குகிறது. 'அசட்டுப் பிச்சுவைச் சந்தித்தேன்' கதை சுமார்தான்.

பிருந்தாவனத்தில் முன்பு கண்ணன் கோபியர்களின் வீட்டில் வெண்ணெய் திருடினான். ஆனால் கண்ணன் இப்போது குழந்தைகளின் உள்ளங்களைத் திருடுகிறான். அதற்கு நாங்கள் கொடுக்கும் தண்டனை இதுதான்:- கண்ணன் மாதம் மும்முறை [10, 20, 30 தேதிகளில்] வரவேண்டும்.

N. திலக்,
25, நம்மாழ்வார் செட்டித் தெரு,
சூளை, வேப்பேரி, மதராஸ்-7.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# பேராசை

என். ஆர். லக்ஷ்மி

மவுண்ட்ரோட்டில் ஒரு கிழவரின் கையிலிருந்து தவறி விழுந்த மணிபர்ஸைச் சட்டென்று பின்னால் வந்த மணி குனிந்து எடுத்தான். உடனே அதைக் கிழவரிடம் கொடுக்கப் போனபோது அவனுடைய நண்பன் வீரப்பன் அவனைத் தடுத்து, "அடே முட்டாள்! நீ திருட்டுத் தொழிலுக்கே லாயக்கில்லேடா! கையில் கிடைத்ததை எந்த முட்டாளாவது கொடுப்பானா?" என்றான். அதற்கு மணி, "கிழவன் சட்டைப் பையில் நிறையப் பண நோட்டுக்கள் இருக்கின்றன. இந்தப் பர்ஸைக் கொண்டுபோய்க் கொடுத்து அவனுடைய நன் மதிப்பைச் சம்பாதித்துக்கொண்டால், பிறகு சட்டையிலிருக்கும் அத்தனை பணத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு விடலாம்! உன்னைப்போல் அல்பத்துக்கு ஆசைப்பட்டு அத்துடன் திருப்தியடைபவன் நான் அல்ல. என் வழியே வேறு!" என்று பதில் அளித்துவிட்டுப் பர்ஸைத் தேடிக்கொண்டிருந்த கிழவரிடம் ஓடிச் சென்று, "ஐயா, தங்கள் பர்ஸ் கீழே விழுந்துவிட்டது. இந்தாருங்கள்" என்று பணிவுடன் பர்ஸை அவரிடம் கொடுத்தான்.

கிழவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "நீ நன்னா இருக்கணும் அப்பா!.. எந்தத் திருடர் கையிலாவது அகப்படாமல் இருந்ததே!" என்று கூறிவிட்டு மேலே நடந்தார். மணியும் அவர் பின்னால் சென்றவண்ணம், "ஸார், பையிலே நிறையப் பணத்தை வச்சுண்டு போகக்கூடாது நீங்க! அதுவும் இருட்டு வேளையிலே.. திருடன்கள் ஜாஸ்தி இங்கே.. எங்கிட்டே கொடுங்கோ! ஜாக்கிரதையா எடுத்துண்டு வரேன்" என்று கூறிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அவர் பதிலே பேசவில்லை. இன்னும் அவரைப் பயமுறுத்தக் கருதி மணி அங்கே நடந்த திருட்டுகளையும், திருட்டுக் கொடுத்தவர்களின் விருத்தாந்தங்களையும் சொல்லி வந்தான். கடைசியில் கிழவர் சரி என்று சொல்லித் தலையாட்டினார். மணி அதற்குள் தன் யுக்தி பலித்ததைக் கண்டு சந்தோஷத்துடன் கையை நீட்டினான்.

கிழவர் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்து, "என்ன வேணும், ஆசீர்வாதந்தானே?.. பேஷா ஆசீர்வாதம் பண்றேன்! நீ தங்கமான பிள்ளை! திருட்டுப் பயம் ஜாஸ்தியாய் இருக்கிற இந்த நாளிலே இதுவரையில் துணைக்கு வந்த நீ நன்னா இருக்கணும். நீடூழி வாழணும்" என்று கூறி அந்த வழியே வந்த பஸ்ஸில் தம் பல் இல்லாத வாயைக் காட்டிச் சிரித்தவண்ணம் ஏறிக்கொண்டார்.

கிழவர் முழுச் செவிடு என்பது அப்பொழுதுதான் தெரிந்தது. தன் பேராசையால் கிடைத்ததும் போய்விட்டதே என்று வருந்தினான் மணி.

Reg. No. M. 5542

## புதிய கண்ணன் வெளியீடுகள்

## வால் அறுந்த குரங்கு

வால் அறுந்த குரங்கு, இதோ இந்தப் பிள்ளை, ஈயின் கதை முதலிய ஐந்து பாட்டுக் கதைகள் அடங்கிய சிறுவர் புத்தகம். பாட்டைப் பாடிக்கொண்டே எழுத்துக்களைக் குழந்தைகள் கற்றுக்கொண்டு விடுவார்கள். வர்ணப்படங்கள் நிறைந்தது.

விலை 8 அணா

## மின்னல் அரக்கன்

இதில் உள்ள கதைகள் எல்லாம் பழங்காலத்துக் கதைகளைப் போலத்தான் இருக்கும். ஆனால் கதையின் போக்கும் கற்பனை அழகும் உங்கள் உள்ளத்தைக் கவரக்கூடிய முறையில் அமைந்தவை. படித்துப் பாருங்கள். பரவசம் கொள்வீர்கள் என்பது நிச்சயம்.

விலை 8 அணா

## பவழவல்லி

கி. ரா. எழுதியது

அது ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர்கள் எல்லாரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்பு கொண்டவை. முத்துக்களும், நவரத்தினங்களும், பவழங்களும் விளையும் நாடு. அங்கே போய்ச் சேர்கிறான் சுந்தரம். ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிறான். அவனால் ஆகாத காரியத்துக்கெல்லாம் ஆமை ஒன்று உதவுகிறது. பலவிதச் சோதனைகளில் அகப்பட்டுக்கொள்கிறான். மிகவும் சுவாரஸ்யமான கதை.

விலை 12 அணா

## பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்களும்

கதை பழங்காலத்துக் கதைதான். என்றாலும் படிக்கப் படிக்க, கதையின் போக்கு உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அத்தனை சுவாரஸ்யமான கதை.

விலை 3 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.